ரிஜிஸ்டர் நெ. 2041.　　　　தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு


| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, | — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, | — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8.　　ஈரோடு, ஆங்கிரஸ-ஹு தை-மீ 3-உ (15—1—1933)　　மலர் 38.


கடவுளையும் காங்கிரசையும் ஒழிப்பது பார்ப்பனீயத்தையும், சோம்பேறி வாழ்க்கையையும் ஒழிப்பதாகும்.



மதத்தையும் தேசியத்தையும் ஒழிப்பது முதலாளித்தனத்தையும் ஏகாதிபத்தியத்தையும் அழிப்பதாகும்

தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் ஐரோப்பா சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வந்த சமயம், கொழும்பு சுயமரியாதைச்சங்கத்தார் அளித்த வரவேற்பின் போது எடுத்த படம்.

## எங்கள் வீணை.

(பாரதிதாஸன்)

(ஏற்ற ராகத்தைச் சேர்த்துப்பாடுக)

1: கடவுள் கடவுள் என்றெதற்கும் கதறுகின்ற மனிதர்காள்!
கடவுள் என்ற நாமதேயம் கழறிடாத நாளிலும்
உடைமையாவும்பொதுமையாக உலகுநன்றுவாழ்ந்ததாம்[தந்த
"கடையர்" "செல்வர்" என்ற தொல்லை கடவுள்பேர் இழைத்

2. உடைசுமந்த கழுதைகொண்டு ழைத்தோர் நிலைமையும்
உடைமைமுற்றும் படையையேவி அடையும்மன்னர் நிலைமையும்
கடவுளாணை யாயின், அந்த உடைவெளுக்கும் தோழரைக்
கடவுள்தான்முன் னேற்றுமோ? தன் கழுதைதான்முன்
னேற்றுமோ?

3. ஊரிலேனும் நாட்டிலேனும் உலகிலேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலையொக்கும் நேர் உழைப்பவர்தொகை
நீர்மிதந்த ஓடமொக்கும் நிறைமுதல்கொள் வோர்தொகை
சூரைஒன்று மோதுமாயின் தோணிஓட்டம் மேவுமோ?

4. தொழிலறிந்த ஏழை மக்கள் தொழில் புரிந்து செல்வர்பால்
அழிவிலாமு தல்கொடுக்க அம்முதற்ப லத்தினால்
பழிமிகுந்த அரசமைத்துப் படைகள் தம்மை ஏவியே
தொழில்புரிந்த ஏழைமக்கள் சோற்றிலேமண் போடுவார்

5. கடவுசெய்த தோழர்கூலி நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாதசெல்வர் உலகைஆண்டு வாவலும்
கடவுளாணை என்றுரைத்த கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத் தொழிலுளாரை ஏவுவோம்.

———

# இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

### என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பராஞ்சிபே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+ இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சீர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும் நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல் வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| இதன் விலை அணு ... ... ... | 0—8—0 |
| குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணு ... | 0—6—0 |

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

---

## "கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா வென்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணு 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணு தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

**மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

---

## எங்கே கிடைக்கும்?

பல மருந்துகளையும் கைபாடி பயனடையாமல் இருப்பவர்கள் தக்க மருந்தையறிந்துகொள்ளும் பொருட்டு இதைப்பிரசுரம் செய்திருக்கிறோம்.

எவ்வித வியாதிக்கும் ஏற்றமருந்து பழனி மலையப்பசாமி வைத்தியசாலையில்தான் கிடைக்கும்.

வியாதிவிபரம் எழுதி ஏற்ற மருந்தை அடையுங்கள்! இன்றே ஆர்டர் செய்யுங்கள்!

மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S.I.

---

## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.

பிரதி ஒன்றுக்கு விலை அணு. 0—6—0

நாஸ்திகன்

C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

---

## குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம்

## கும்பகோண மகாமகம்.

# "இந்நிலை சண்டாளர்கள் ஏற்பட எத்தனை பார்ப்பனப் பெண்கள் கெட்டு இருக்கவேண்டும்?"

(கைவல்யம்.)

ஐயா, முதலியார்களே, நாயுடுகளே, கவுண்டர்களே பிள்ளைகளே, நாட்டுக்கோட்டை நகரத்துச் செட்டியார்களே, இன்னும் தென்னாட்டிலுள்ள பார்ப்பாரல்லாத சமூகங்களே! உங்களுக்குச்சில விஷயங்களைத் தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

ஒரு தேசத்துஜனங்கள், ஒரு கூட்டத்துச்ஜனங்கள் தனித்தனிமனிதர்கள். இவர்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றித் தெரியப்படுத்துகிறபோதும், கேட்டுக்கொள்ளுகிறபோதும் அவர்களுடைய ஜாதிமகிமை, குலப்பெருமை, குணவிஷேடம்முதலியவைகளை எடுத்துச்சொல்லுவது வழக்கமாகும். அதுபோல இப்பொழுது நானும் உங்கள் ஜாதி, குலம், குணம் முதலிய பெருமைகளை எடுத்துச் சொல்லவேண்டும். அப்படிச்சொல்லுவதனுல் உங்கள் ஜாதியின் மகிமையோ பிராமணதாசிமகனின் ஜாதி மகிமையாகும். குலப்பெருமையோ அடிமை, குணவிஷேடமோ ஒழுக்கம் கெட்டு, ஆசாரம் விட்டு கண்டதைப்புசிக்கும் குணவிசேடமாகும். இந்தப் பெருமையோடு உங்களை வர்ணித்தால் உங்கள் மனம் நோகும், கோபிக்கும், என்ன செய்வது இதைவிட உங்கள் சமய சாஸ்திர இதிகாச புராண சனுதன தருமத்தில் இல்லையே, இல்லை என்று உங்கள் புரோகிதர்கள், ஆச்சாரிகள், வக்கீல்கள் தீர்மானம்பண்ணிவிட்டார்கள் அந்தப்படிபிரசங்கம் செய்தும் வருகிறார்கள். பத்திரிகையில் எழுதியும் வருகிறார்கள். அதைவிடப் பெருமை உங்களுக்கு இப்பொழுது இருப்பதாக நீங்கள் நினைத்துக் கொள்ளுவதெல்லாம் ஆங்கிலேய அரசாக்ஷியின் மகிமையே ஒழிய உங்கள் சமய சாஸ்திரப் பெருமையல்ல.

வருணாச்சிரம தருமமென்றும், சனுதன தருமமென்றும் சபைகூட்டி அதில் வக்கீல் பார்ப்பார்களும், துபாஷிப் பார்ப்பார்களும், திருவனந்தபுரம் ஊட்டுபுரைச்சோற்றிற்கும் மலையாளத்து ஏவல்பணிக்கும் போயிருக்கும், தமிழ் நாட்டுப் பார்ப்பார்களும் வைதீகர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு, பிராமணனே சூத்திரன், சூத்திர ஆணுக்கும் பிராமணப் பெண்ணுக்கும் பிறந்தவனே சண்டாளன் என்று பிரசங்கம் செய்தும், சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதியும் வருகிறார்கள். அதில் சிலர் கோபமாகவுமெழுதுகிறார்கள். சிலர் பார்ப்பார்களுக்கும், மற்றவர்களுக்கும்வித்தியாசம், பசுவிற்கும் நாயுக்கும் போன்ற தென்றும் எழுதுகிறார்கள். நடுநிலைமையிலிருந்து நியாயமுணர்த்தும் பார்ப்பார்கள் சிலர் இருப்பதை நினைத்து நானும் அதில் அநேகமாகக் கலந்து கொள்ளாமலிருந்தேன்.

தஞ்சாவூரைச்சேர்ந்த துவார் என்கிற கிராமத்தில் இதற்குமுன் பாலக்காட்டு அனந்தகிருஷ்ணய்யர் எம். ஏ. என்பாரின் தலைமையின் கீழ் பிராமண சபை கூட்டி க்ஷத்திரியனும், வைசியனும் இப்பொழுதில்லே; பிராமணனும், சூத்திரனும் என்னும் ஜாதியே இப்பொழுதிருக்கிறது என்று தீர்மானம் பண்ணினார்கள். அதை சுயமரியாதை இயக்கம் கண்டித்தது; உடனே அதை நழுவவிட்டார்கள், என்றாலும் அதே நாளாக அந்த சமூகம் மற்ற சமூகங்களை இழிவாக நினைக்கும் சுபாவகுணம் மாருமலிருக்கிறது யென்பது இப்பொழுது நடந்து வரும் ஆலயப்பிரவேச தர்க்கத்தால் தெரிகிறது.

சிறிது நாளைக்கு முன் மைலாப்பூர் பார்ப்பார்கள் சபையில் சி. பி. ராமசாமி அய்யரின் தலைமையில் வி. வி. சீனிவாச அய்யங்கார் செய்த பிரசங்கத்தில் பார்ப்பானுக்கும், மற்ற சமூகங்களுக்கும் முகவசீகரத்தில் வித்தியாசமிருக்கிறதென்றும், அதனுல் சில தாழ்மைகளைக் கற்பித்தும் பேசினார். பாடு படாமல் பாதசேவையைக் காட்டிப்பல பொருள் பெற்று வாழ்கிறவர்களுக்கும், வெய்யல்மழைகளில் பாடு பட்டு வாழுகிறவர்களுக்கும் முகத்தில் வித்தியாசம்தோன்றலாம். முகவித்தியாசத்தினுல் கெட்டுப்போகிற விவகாரங்களெதுவாவதுண்டா? நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட பிரகிருதியின் இரகசியங்களெல்லாம் எந்த முகவசீகரத்தை ஆதாரமாகக் கொண்டது. இன்னும் பல ஞானிகளுடைய முகவசீகரம் எந்த அய்யங்கார் முகத்தை ஆதாரமாகக் கொண்டது. குரங்கும் ராக்ஷதனுமல்லவோ சின்னப்பெரிய திருவடி அதில் எந்த அய்யங்கார் முகம் பிரபலித்தது என்கிற பல நியாயங்களால் கண்டித்தோம்.

இப்பொழுதும் வக்கில் பார்ப்பார்களும், துபாஷிப் பார்ப்பார்களும், மடத்துச்சோற்றுப் பார்ப்பார்களும் வைதீகர்களென்று சொல்லிக் கொண்டு பிராமணனும் சூத்திரனும் என இரண்டு ஜாதியே தவிர மற்ற வருணமில்லை என்கிறார்கள். இவ்விதம் அவர்கள் சொல்லுவதற்குக் காரணமென்ன? ஏன் அப்படிச் சொல்லுகிறார்கள்? அதனுல் அவர்களுக்கென்ன லாபம்? நமக்கென்ன நஷ்டம்? என்பவைகளை முதலில் சொல்லுகிறேன்.

முன்காலத்தில் நமது நாடு பிராமண ராஜ்ஜியமாகவே நடந்து வந்தது. ராஜாங்க சட்டங்களிலும், சமூகயேற்பாட்டிலும் ஸ்மிருதிகளென்னும் தர்ம சாஸ்திரங்களே சட்டங்களாகவிருந்தன. அதனுல் பிராமணன் தன் ஸ்தானங்களைக் கெட்டிப்படுத்தி மற்ற சமூகத்தின் அறிவின் வேர்களை பரித்துவிட்டார்கள். அன்னிலையில் நமது நாட்டில் அன்னியர் படை எடுப்புண்டாயிற்று அப்போது மற்றவர்களின் அறிவீனமும், அனுபோகக்குறைவும், பார்ப்பானின் வேள்வியும், மந்திரமும், ஆசாரமும், தேவபூசையும், சனுதன தருமமும், க்ஷத்திரியன் அதில் காட்டிய பக்தியும், மற்றவர்களின் அடிமைத்தனமும் பிரயோஜனப் படாமல் வீழ்ச்சியடைந்தது, க்ஷத்திரியஜாதி அழிக்கப்பட்டு அன்னிய அரசாக்ஷி பரிணமித்தது.

அன்னிய நாட்டு மனிதர்கள் ராஜாளுனர்கள். வியாபாரமோ அன்னிய நாட்டுப் பல ஜாதிக்காரர்கள் செய்தார்கள். பார்ப்பாரின் தருமச் சட்டத்தின் கொடுமைக்கு நமது க்ஷத்திரிய ராஜாக்களால் பயந்து கிடந்த மற்றவர்கள் அன்னிய ராஜாங்கத்தில் எல்லா விஷயங்களிலும் சற்று விடுதலையடைந்து மேம்பாடு அடைந்தார்கள். பார்ப்பார்களும் தங்கள் பலனற்ற கருமங்களில் பலத்தை விட்டுவிட்டார்கள்.

இதையெல்லாம் கண்ட பார்ப்பார்கள், 'வேள்வியால் க்ஷத்திரியன் காப்பாற்றப்படுவான், வருணாச்சிரமதருமத்தைக் காப்பாற்றும் க்ஷத்திரியன் நீடுழி வாழ்வான் என்று சொல்லிவந்ததெல்லாம் பிரயோஜன மற்றதாலும், அதையே செய்துகொண்டிருந்த க்ஷத்திரியரெல்லாம் ஏன் அரசு இழந்தார்கள், வருணாச்சிரமத்தைக் காப்பாற்றிக்கொண்டிருந்த ராஜாக்களெல்லாம் ஏன் அழிந்தார்கள், வருணாச்சிரம தருமமில்லாத அரசனும் வேள்வி செய்யாத மன்னனும் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டியும் வருணாச்சிரமத்திற்கு ஒத்த உங்கள் தொழிலை ஏன் செய்யவில்லை என்று கேட்பவர்கட்கும் எங்களைக் காப்பாற்றும் க்ஷத்திரியர்களில்லை என்று சொல்லுவதற்கும் ஆலோசித்து ஒரு ஏடு எழுதி அதற்குப் பராசா ஸ்மிருதியென்பதாகப் பெயரும் கொடுத்து அதுகலியுகத்திற்குப் பிரமாணமென்று கற்பித்தும் விட்டார்கள். பராசரஸ்மிருதி என்றால் பராசரால் செய்யப்பட்ட தரும சாஸ்திரம். இதில் கலியுக தருமமென்றும், கலியுகத்தில் வருணாச்சிரமதருமம் மாறுமென்றும், மததருமங் குறையுமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவைகளை முன்னமே ரிஷிகள் தெரிந்தே சொன்னார்களென்றும் பிரசாரம் செய்தார்கள். ஆங்கிலேய ராஜாங்கத்திற்கு முன் இவ்வளவு படித்தவர்களில்லை, புஸ்தகங்களில்லை, படிக்க வசதிகளில்லை இப்பொழுதுபடித்தமுட்டாள்கூட பகுத்தறிந்து ஆலோசித்துப்பார்க்காமல் பலனற்றதை நம்புகையில் அந்தக்காலத்து ஜனங்கள் நம்பினதில் ஆச்சரியமொன்றுமில்லை.

அரசாளும் ஜாதி அன்னிய ஜாதியாய்ப்போனதாலும், வியாபாரம் செய்யும் ஜாதி பலஜாதியாய்ப் போனதினுலும், இந்த கலியுகத்தில் க்ஷத்திரிய வைசிய ஜாதி இல்லை என்றும் பிராமண ஜாதியும், சூத்திரஜாதியும், தான் இருக்கிறதென்றும், சொல்லுகிறார்கள். அழிந்துபோன வருணாச்சிரமத்தை எதுவரையிலும் நிலை நிறுத்துகிறார்களோ அதுவரையிலும் பார்ப்பானுக்கு லாபம். கர்மமென்றும் பிராயச்சித்தமென்றும், திதியென்றும், நாளென்றும், நட்சத்திரமென்றும், ஏமாற்றி மேன்மையும் லாபமும் அடைகிற ஜாதிக்கு ஏமாந்து நம்பும் இன்னெரு ஜாதியும் வேண்டும் அதனுலேதான் பிரத்தியட்சத்தில் மறைந்துபோன க்ஷத்திரியனும் வைசியனும் இல்லையென்றும், பிராமணனென்றும், சூத்திரனென்றும், ஒத்துக்கொண்டு விபகாரம் நடத்துகிறவர்களுமிருப்பதாலும் அவை நடந்து வருகிறபடியாலும் அவை தங்களுக்கு எல்லா விஷயங்களிலும் அனுகூலிப்பதாலும், பிராமண ஜாதியும், சூத்திர ஜாதியுமிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். ஒரு புரோகித ஜாதியும் அந்தப் புரோகிதஜாதியின் தாசி மகனுமாகிய இரண்டு ஜாதி எந்த உலகத்திலுமில்லை. மானங்கெட்ட ராஜ்ஜியத்திலிருக்குமே யல்லாமல் மனிதத்தன்மையுடைய ராஜ்ஜியத்திலிருக்காது.

இப்பொழுது பல ஜாதிக்காரர்கள் க்ஷத்திரியர்களென்றும், வைசியர்களென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்களே என்றால், அதனுல் பார்ப்பானுக்கு அரிசி, பருப்பு, தட்சணை அதிகமாகுமேயல்லாமல் நஷ்டமொன்றுமில்லை. தனவைஸ்யர்கள் என்று பார்ப்பானுக்கு அள்ளிக்கொடுத்து அழுத பாவமெல்லாம் பட்டோலையில் பாசிப்படரும் பாக்கியத்தில் வந்திருக்கிறது. உத்தம பார்ப்பான் அல்லாதவனுக்குக்கொடுக்கும்தானம் உயர்நிலையைக்கெடுத்துவிடும் என்பதும் சாஸ்த்திரம் சொன்னதே.

ஐயா சாஸ்திரிகளே, ஆசாரிகளே பிராமண ஜாதியோ நீங்களாயிற்று சூத்திர ஜாதியென்றால் பிராமணனின் தாசிமகன், அடிமை, மடையன் ஒழுக்கமில்லாதவன், ஆசாரமில்லாதவன் கண்டதைத்தின்பவன் கிலேச மனமுடையவன், என்னுளும் துன்பத்தோடிருப்பவன் என்றல்லவோ சொல்லுகிறீர்கள். பிராமண ஜாதியான அய்யர், அய்யங்கார், ராவ்த்வார பிள்ளைமார், நாயுடுமார், கவுண்டமார், முதலியார், ஒதுவான், தேசிகன் முதல் எல்லோரும் உங்கள தேவடியார் மக்களா? அடிமைகளா ஒழுக்கம் கெட்டவர்களா? என்று கேட்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# கோழிமுட்டை வந்ததும், காணமற் போனதும்.

## ஓர் ஆச்சரிய சம்பவம்.

### தூத்துக்குடி நிருபருக்கு விடை.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

தூத்துக்குடியிலிருந்து (Tuticorin), ஒரு நிருபர், பின் வரும் சம்பவத்தை எழுதி, அச்சம்பவத்திற்கு யாரைக் கேட்டாலும் சரியான விடை அளிக்கவில்லை என்றும், தோழர் சிங்காரவேலுக்கு எழுதினால் அதன் உண்மையை விளக்குவாரென்றும், தூத்துக்குடியில் பலர் சொன்னதாகவும், அந்த சம்பவத்தின் உண்மையை விளக்குமாறு அத்தியந்த வினயத்துடன் கேட்டுக் கொள்ளுகின்றார். இதற்காக, ஒரு அணா மூன்று பைசா செலவு செய்து, நீண்டதோர் கடிதமொன்றை எழுதினார்.

இவ்விதமான கேள்விகள், பல இடங்களிலிருந்து, பல நிருபர்கள், நமக்கு எழுதுகின்றார்கள். ஆனால் கேட்கும் கேள்வி, நடந்த சம்பவம் ஒரு பக்கமிருக்க, நமது நிருபர்களே சற்று கண்களைத் திறந்து உஷாராக கவனித்திருப்பார்களேயானால், இவர்களுக்கே, இத்தியாதி சம்பவங்களின் உண்மை விளங்கக் கூடும். இதைச் செய்யாமல், காணும் அற்ப தந்திரங்களுக் கெல்லாம், காரணங்களை தெரிவி என்று பலமுறையும் ஸ்டாம்பு செலவு செய்வதை விட "குடி அரசு" பிரசுரங்களை வாங்கி படிக்கலாமன்றோ?

ஒரு வீட்டில் கோழி யொன்றுமில்லையாம். அவ்வீட்டில் கோழி முட்டை ஒன்று கிடந்ததாம்! அந்த வீட்டு சொந்தக்காரர், நமது நிருபரை அழைத்து, அந்த முட்டையைக் காட்டி, இதோ பாருங்கள்! கோழியில்லாத வீட்டில், ஒரு முட்டை வந்திருக்கிறது இதற்கு நீங்கள் எப்படி வந்ததென்று அனுமானிக்கின்றீர்கள் என்றாராம்? வீடும் சாத்தப்பட்டு இருந்ததாம் அறையும் சாத்தப்பட்டு இருந்ததாம். நீங்கள் நம்பாமற்போனால் அந்த முட்டையை ஒரு குட்டையில் கட்டி வையுங்கள், அது காணமற்போகும் என்றாராம். அது போலவே நமது நிருபரும் தனது குட்டையில் கட்டி வைத்த பிறகு, அந்த முட்டை காணமற் போயிற்றாம்! இதனை விளக்குமாறு கேட்கின்றார். இதை வாசித்ததும் நமது குழந்தைகள் சிரித்தார்கள். ஒரு குழந்தை கேட்கின்றது. காணமற் போகும் முட்டையை, குட்டையில் ஏன் மறைக்க வேண்டும்? வெளியிலேயே கண்ணுக்கு முன்பாக, மூடாமல் வைத்து, ஏன் மறைந்திருக்கிறதென பார்க்கலாகாது? என்றது? நமது குழந்தை சொன்ன கேள்வியைத் தான் நானும் நமது நிருபர்களைக் கேட்கின்றேன். ஏன் குட்டையிலோ, அல்லது, மறைவான பாத்திரத்திலோ, வைக்க விடுகின்றீர்கள். காணமற் போகும் பொருள், மறைத்து வைத்தால் தானு காணமற் போகும்? நாமே ஏமாறும்படி நாம் முதலில் விட்டு விட்டு, மறைந்து போன பிறகு, எப்படி மறைந்ததென் என்று கேட்பதில் என்ன பிரயோஜனம்?.

எல்லா ஜால வித்தைகளும் (Conjuring tricks) மறைவிலும், இருட்டிலும் தான் நடக்கின்றன. தொப்பியில் புறாவும், மூடிவைத்த தட்டில் ரூபாயாவது மிட்டாயாவது வரும். இவைகள் ஏன் நமது கண்கள் முன்னால் வெளியிலிருந்து Open space வரக் கூடாது?

இந்த மறைக்கும் தந்திர மோசத்தில் நான் எல்லா ஜால வித்தைகளும் நிகழ்கின்றன.

மூடி மூடி வைப்பதால் தான், எல்லாவித மோசங்களுக்கும் தந்திரங்களுக்கும் இடம் கொடுக்கின்றது. வீட்டு அறைகளில் கைகால்களை கட்டி விட்டு வைத்த வொருவன் மூடப்பட்ட வீட்டிலிருந்து வெளிப்படுகின்றான். ஆனால், அறையில் அடைக்கப்படாமல் சரியாகக் கைகால்களை கட்டி விட்ட பிறகு, அந்த கட்டை அவிழ்க்கின்றானென்று கண் முன் செய்த வித்தை யொன்றும் பலிக்கவில்லை! ஏன்? மூடி வைப்பதில் தான், எல்லாவித மோசமும் இருக்கின்றது. இன்னொரு நிருஷ்டாந்தம் வேண்டுமானால், "பூ அம்மா வென்று" அழைக்கப்படும் தொம்பரவப் பெண்ணை, கூடையில் மறைக்காமலே கத்தியால் குத்தட்டுமென்று கேட்கின்றேன்? அல்லது, மாங்காயை மறைக்காமலே, நமது முன்பாக திரை யொன்றும் கட்டாமல், நட்டு வித்து அது விருட்சமாகின்றதாவெனப் பாருங்கள்?

எல்லாவித தந்திரங்களும் மறைத்து வைப்பதால் தான் நாம் அவைகளால் ஏமாறுகின்றோம்.

நமது நிருபர் கைகுட்டையில் மறைத்த முட்டை, இவரை அந்த குட்டையை ஒரு கூணப்போழுதாகிலும் பாராமல் செய்த வேளையில் அந்த முட்டையைக் கொண்டு வந்தவர், ஏன் எடுத்து விடக்கூடாது? அந்த முட்டையைத் தனது சோபி (Pocket) யில், போட்டு மறைக்கிறதா வென்று ஏன் பரீட்சிக்கலாகாது?

நமது நிருபர் "குடி அரசை"ப் படிக்கின்றவராதலாலும், கடவுள் மேல் நம்பிக்கை இல்லாதவராதலாலும் இவரை நம்பவைக்க ஏதோ வொரு குறும்புக்காரர் இந்தத் தந்திரத்தைச் செய்தாலும் செய்திருக்கலாம்.

இவ்வித சம்பவங்களை காணும் பார்க்க வேண்டுமென்று ஆவா கொண்டிருந்தும், என் முன் எதுவும் நடப்பதைக் காணோம்.

முட்டை, சாத்தி வைத்த அறையில் எப்படி வந்திருக்கு மென்று கேட்டாராம்? அண்டை வீட்டுக் கோழி, நமது வீட்டில் முட்டை இடுவது ஸகஜந்தானே! கோழி இல்லாத வீட்டில் அயல் வீட்டுக் கோழி வந்து முட்டை இடுவதில் என்ன விசேஷம்? என்ன ஆச்சரியமென்று கேட்கின்றேன்?

ஆச்சரியப்பட வேண்டிய விஷயங்கள் பல இருக்க நமது நண்பர்கள், கோழி முட்டை முந்தியதா? கோழி முந்தியதா? மூடப்பட்டிருந்த வீட்டில், கோழிமுட்டை எப்படி வந்திருக்கும்? குட்டையில் மூடப்பட்ட முட்டை எப்படி மாயமாய் மறைந்தது? என்ற அற்பக் கேள்விகளைக் கேட்டால் யாது பயன்? கோடான கோடி தெய்வங்கள் இருக்கும் நாட்டில், பசியும், பிணியும், அத்தெய்வங்களைத் தொழும் பக்தர்களை வாட்டி வருத்துவானேன்? கழிப்பு எடுத்தும், ஆடு கோழிகளைக் காவு கொடுத்தும், சத்தி விட்டும், பிறக்கும் குழந்தைகளில் மூன்றில் வொன்று சாவானேன்?

காசி, ராமேஸ்வரம், மாமாங்கம், கும்பாபிஷேகம், போய் பார்த்தும், ஏன் ஆயிரக்கணக்கான ஏழைமக்கள் காலரா (Cholera) வினும், விஷசுரத்தாலும், (Malaria) அந்த இடங்களிலேயே மடிகின்றார்கள்?

அல்லது, மாட மாளிகை, கூட கோபுரங்களும் நிறைந்துள்ள நாட்டில் முப்பது கோடி மக்கள் குடிசைகளில் வசிக்க நேரிடுகிறது?

அல்லது, 3-வேளையும் புசிக்கும் அரசர்கள், ஜமீன்தார்கள், ராஜாக்கள், லாயர்கள், ஜட்ஜிகள், வர்த்தகர்கள், மில் அதிபதிகள், மடாதிபதிகள் வசிக்கும் நாட்டில், நாலுகோடி ஜனத்திற்கு, ஒரு வேளை கூட உண்ண வொன்றுமில்லாமல் இருப்பதேன்?

இவ்வித ஆச்சரியங்களையன்றோ கவனிக்க வேண்டும்? இவ்வித சம்பவங்களை எல்லாம் நமது கண் முன் நடப்பதை கவனியாது காலணு கோழி முட்டை போனது தெரியாத விஷயத்தில் நமது நாட்டுமக்கள் மனத்தைச் செலுத்துவது தான் வருந்தத் தக்கது.

இன்னொருவிஷயம் நமது நிருபர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ரங்கூன், கொழும்பு, கோலாலம்பூர் முதலிய இடங்களிலிருந்து, சில தோழர்கள், தாங்கள் ஒரு பத்திரிகையை ஆரம்பிக்கப் போவதாயும், அதற்கு விஷயங்களை எழுத வேண்டுமென்றும் கேட்கின்றார்கள்.

என்னுடைய வயதும், தேக வன்மையும், நமது நண்பர்கள் வேண்டுகோளுக்கிணங்க விடவில்லை. மேலும் நமது "குடி அரசு" வொன்றை ஆதரித்தாலே போதுமானதென்று எண்ணுகின்றேன். மேல் நாட்டில் ஒவ்வொரு பத்திரிகையும், லட்சக்கணக்காக செலவாக, நமது நாட்டில் பத்தாயிரத்திற்குக் கூட இடமில்லை இந்த நிலைமையில், ஊருக்கு ஒரு பத்திரிகை ஆரம்பிப்பதென்றால், அது வீண் எனத் தோன்றுகின்றது. இதனை நமது நிருபர்கள் கவனிக்க வேண்டும்.

## பாப்பா கோவிலில் சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

25-12-32 தேதி மாலை 6 மணிக்கு நாகைதாலூகா பாப்பா கோவிலில் தோழர் முத்துக்குமாரசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டமொன்று நடந்தது.

தோழர் வி சாமிநாதன் "சுயமரியாதைக்கீதங்கள்" பாடினார். தலைவர் முகவுரையாக எல்லோரும் கூட்டம் முடியும் வரை அமைதியாக இருந்து கேட்க வேண்டுமெனக் கூறினார். பிறகு தோழர்கள் எம். கோவிந்தராஜ், வி. சாமிநாதன் எம். ஆர். பதி, லக்ஷ்மணர், ஆர். வி. கோபால், எம். எ. கோவிந்தசாமி, கே. முருகேசன் முதலியவர்கள் "தீண்டாமை" சம்பந்தமாகவும், "மக்கள் முன்னேற்ற மடைவதெங்ஙனம்" என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

## இந்திய சுயமரியாதைச் சங்கம், செந்துல், கோலாலம்பூர்.

இச்சங்க மாதாந்தர பொதுக்கூட்டம் தோழர் டி. எஸ். குருசாமி அவர்களின் அவைத்தலைமையில் 18-12-32 பிற்பகல் மணி 6க்கு, சங்கக்கட்டிடத்தில் நடைபெற்றது. அவ்வமயம் பல நண்பர்களும், சீர்திருத்த அபிமானிகளும் விஜயம் செய்திருந்தனர். இச்சங்கத்திற்கு முறையே தலைவராகவும், கணக்குப் பரிசோதகராகவும் இருந்த தோழர்கள் எஸ். எம். ராமையா, வீ. பா. ரங்கநாதன் இவர்கள் சங்கத்தை விட்டு பிரிந்தபடியால் அந்த காலி இடத்திற்கு புது உத்தியோகஸ்தர்கள் நியமனம் செய்யப் பெற்றது. பின் சிலரை நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுத்த பின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

# மதத்தைப்பற்றி லெனின் எழுதியது.

6-ம் அத்தியாயம்.

## A. M. Gorky கார்கிக்கு (லெனினால் எழுதப்பட்ட) இரண்டு கடிதங்கள்.

(இதில் கடவுளைப்பற்றிய தத்துவார்த்தங்களுக்குச் சமாதானம் இருக்கிறது.)

[S. R. & E. V. R. மொழிபெயர்ப்பு]

(சென்ற வாரத்தொடர்ச்சி)

### இரண்டாவது கடிதம்

அன்புள்ள Alexei-Maximovich அவர்களே!

கடவுள், தெய்வீகம் முதலிய பிரச்சினைகளைப்பற்றி தாங்கள் முன்னுக்குப் பின் விரோதமாய்ச் சொல்லுகிறீர்கள். இதே முரண்பாட்டைப்பற்றி கேப்பிரி (Capri) யில் நாம் இருவரும் சென்ற தடவை சந்தித்த போது நாம் பேசிக்கொண்டதில் சுட்டிக் காட்டினேன். Vperyodists விப்பிரியோடிஸ்ட்ஸ் என்ற தீவிர போல்ஷ்விக் கட்சியினின்றும், அதன் கொள்கைகளின் அந்தரங்கத்தைத்தெரிந்து கொள்ளாமலேயே தாங்கள் பிரிந்து விட்டீர்கள். (அல்லது பிரிந்து விட்டதாகக்காணப்படுகிறீர்கள்) அதே சங்கதி இவ்விஷயத்திலும் உண்மையாய் விளங்குகிறது. ஆனால் தங்கள் பதிலில் தங்கள் மனம்புண்படுகிறதாகவும் தங்கள் கட்டுரையில், "தற்காலிகமாக என்ற பதம் எப்படிப்புகுந்து விட்டது என்பது புரியவில்லை" என்றும் எழுதி இருக்கிறீர்கள். இருந்த போதிலும்கூட கடவுள் எண்ணத்தையும், கடவுளை நிர்மாணிப்பதையும் தாங்கள் ஆதரிக்கிறீர்கள். தாங்கள் எழுதுவதாவது:—

"கடவுள் என்னும் எண்ணம் பல கூட்டங்களும் பல தேசத்தாரும் மனிதவர்க்கம் முழுவதும் ஒன்று சேர்ந்து உற்பத்தி செய்த நினைவுகளை எல்லாம் திரட்டி மனிதர்களுடைய சமூக உணர்ச்சியை எழுப்பி வியாபிக்கச் செய்து சமூகத்தையும் ஒவ்வொரு தனி நபரையும் ஒன்று சேர்த்துஇணைத்து மனிதருக்குள் இருக்கும் மிருகத்தனமாகிய சுயநலத்தை அடக்கி வருகிறது."

என்று எழுதி யிருக்கிறீர்கள். இந்த கொள்கைக்கும் Bogdanov போக்டானவ் Lunacharsky லூனசார்ஸ்கி இவர்களுடைய கொள்கை அல்லது அபிப்பிராயங்களுக்கும் சம்மந்தப்பட்டது என்பதில் ஆக்ஷேபணையில்லை. இதனுடைய குற்றமும் பிற்போக்கும் வெளிப்படையாகவே தெரிகின்றன. கிறிஸ்தவ சோஷியலிஸ்ட் எனப்படுகிறவர்களைப்போல் சோஷியலிஸ்ட்டுகளுக்குள் மோசமானவர்களும் சோஷியலிசத்தைக் கெடுத்தவர்களும் வேறு கிடையாது. அவர்களைப்போலவே தாங்களும (ஏதோ நல்ல எண்ணத்துடன் தான் செய்கிறீர்கள் என்றாலும்) இந்தப்பத்திரிகைகள் மாதிரி தந்திரம் செய்கிறீர்கள். தங்கள் எத்தனத்தின் நோக்கமென்னவென்றால்; வாஸ்தவத்தில் சரித்திர பூர்வமாக சமூக அமைப்பில் கடவுளுடன் இணைக்கப்பட்டிருந்த எண்ணங்களாகிய சைத்தான் பிடிப்பது—அறிவற்ற மனக்கசப்பு-அறியாமையையும்,கேவலநிலைமையையும் பெருமைப்படுத்திக் கொள்ளுதல் ஆகிய இவைகள் ஒரு புறமும், மற்றொருபுறம் நிலச்சுவான்தாரர்களுக்கு அடிமைப்பட்டுவரும் அரசனை ஆதரிப்பதும் ஆகிய இவைகளை எடுத்து விட்டு இவ்வித சரித்திர சமூகஉண்மைகளுக்கு பதிலாக "மனிதர்களுடைய சமூக உணர்ச்சியை எழுப்பி வியாபிக்கச்செய்யும்" கடவுள் என்ற ஒரு கற்பனையை அற்ப முதலாளிகளின் நன்மைக்குத் தகுந்தபடி கட்டுக்கட்டி இருக்கிறீர்கள். இந்த கற்பனைக்கு அழகு-ஒழுக்கம்-உண்மை ஞாயம் என்பதாக எல்லாம் அர்த்தம் சொல்லுகிறீர்கள். ஆனால் இவ்வித அர்த்தங்கள் கொண்ட தங்களுடைய எண்ணங்களெல்லாம் வெளியே கிளம்பாமல் தங்களுடைய மனதிலேயே தங்கி விடுகின்றன. ஆனால் தாங்கள் எழுதிய வாசகங்கள் பொது மக்களிடம் சேர்ந்து அவற்றிற்கு அர்த்தம் சமூக நிலைமைக்குத் தக்கவாறும், வகுப்புப் போரில் ஏற்படும் அனுபோகத்திற்குத் தக்கவாறும் சொல்லப் பட்டனவே ஒழிய, மற்றபடி தாங்கள் மனதில் என்ன எண்ணங்களைக் கொண்டு எழுதினீர்கள் என்பதைப் பொருத்துச் சொல்லப் படவில்லை. மற்றவர்களும் அந்தப்படி அருத்தம் கொள்ள அதில் இடமுமில்லை. தாங்கள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் சமூக அமைப்பில் வகுப்புப்போர் ஏற்பட்டு விட்டபடியால் தங்களுடைய செய்கையின் பயனுக பாதிரிகள் இரண்டாவதுஅசார்நிக்கலாஸ், Purishkevich புஷக்கவிச் Struve ஸ்டார்வ் முதலியவர்களின் எண்ணங்களுக்கு ருசியும், அழகும் கொடுக்கப்படுகின்றன. ஏனென்றால் அனுபோகத்தில் கடவுள் என்ற எண்ணத்தைக் கொண்டு அவர்கள் பொது மக்களை அடிமைப்படுத்தி வருகிறார்கள். கடவுள் என்ற நினைப்புக்கு தங்களைவார்த்த அழகு கொடுப்பதினால் என்றுமறியாத தொழிலாளர்களையும், குடியானவர்களையும் கட்டி இருக்கும் அவ்விலங்கை பழுதுபார்த்து கெட்டியாக்குகிறீர்கள். Parson பார்சன் முதலிய கூட்டத்தார் காலையதினம் எழுந்து நின்று "பார்த்தீர்களா கடவுள் என்பது எவ்வளவு அழகிய மேன்மைபெற்ற நினைப்பு பாருங்கள்," உங்களுடைய ஜனநாயககர்த்தாக்களும் உங்களுடைய தலைவர்களுமே இதை ஒப்புக்கொள்ளுகிறார்கள், இந்த காரியத்தை செய்து வைப்பதுதான் எங்கள் கடமை என்று சொல்லுவார்கள்.

"மனிதர்களுடைய சமூக உணர்ச்சியை எழுப்பி வியாபிக்கச்செய்யும் எண்ணங்களின் தொகுதி தான்கடவுள்"என்றுசொல்லுவது உண்மையல்ல. Bogdanovian போகடனோவியன் ஆன்மவாதமாகும். இதன் மூலம் நினைவுகளை உற்பத்தி செய்வதால் பிரகிருதிப் பொருள்கள் என்னும் உண்மை மறைக்கப்படுகிறது. சரித்திர பூர்வமாகவும்ஆராய்ச்சிமுறையாலும் கடவுள் என்பது மனித வர்க்கத்தின் அறியாமையினாலும், மனிதர்கள் முதலில் இயற்கை சக்திக்கும், பிறகு வகுப்பு கொடுமைக்கும் அடிமைப்பட்டதாலும்உண்டான நினைப்புகளின் சேர்க்கை என்பது விளங்கும். இந்தநினைப்புகளே அறியாமையை மேலும் மேலும் வளர்த்து வகுப்பு போராட்டத்திற்கு தடைகளாய் இருக்கின்றன. சரித்திரத்தில் ஒரு காலத்தில் கடவுள் என்ற எண்ணத்தின் அர்த்தமும் ஆரம்பமும் நாம் மேலே சொன்னபடி இருந்தாலும், ஜன நாயக தொழிலாளர்களின் யுத்தங்கள் ஒரு மதம் மற்றொரு மதத்தோடு சண்டையிடுவது என்ற மாதிரியில் தோன்றின. ஆனால் அந்தக் காலம் மலை ஏறி வெகு நாள் ஆகி விட்டது.

இப்பொழுது ஐரோப்பாவில் ருஷ்யாவில் இருப்பது போலவே கடவுள் என்ற நினைப்பை பாதுகாக்கவோ, ஞாயமென்று சொல்லவோ முயலுவது தான் முக்கிய முயற்சியாயிருக்கிறது. என்றாலும் அம்முயற்சி எவ்வளவு நாகரீகமாகவும் நல்ல எண்ணத்துடனும் செய்யப்பட்டாலும் அது பிற்போக்கை ஆதரிப்பதாகவே கொள்ளப்படுகிறது.

தங்கள் வியாக்கியானத்தில் கடவுள் என்பதற்கு "மனிதர்களின் சமூக உணர்ச்சியை எழுப்பி வியாபிக்கச்செய்தும் சமூகத்துடன் தனி நபரை ஒன்று சேர்த்தி கட்டுப்படுத்தியும் நமது இயற்கை மிருகத்தனமாகிய சுயநலத்தைத் தூண்டித்திரும் வரும் எண்ணங்களின் சேர்க்கை" என்று பொருள் கொடுக்கிறீர்கள். இது மிகவும் பிற்போக்கான செய்கை என்பதோடு முழுவதும் பணக்கார வகுப்பை ஆதரிப்பதுமாகும் என்று சொல்லுகிறேன். இதை ஏன் நான் பிற்போக்கான செய்கை என்று சொல்லுகிறேன் என்றால் "நமது மிருகக்குணமாகிய சுயநலத்தை அடக்கவேண்டும்" என்னும் பாதிரிகளின் அடிமை போதனையை இது புதுப்பிக்கிறது. உண்மை என்னவென்றால் நமது மிருககுணமாகிய சுயநலத்தை ஒருக்காலும் கடவுளைப்பற்றிய எண்ணம் தூண்டித் தடுக்கவில்லை. அது எதனால் தூண்டிக்கப்பட்டது என்றால் ஆதிகாலத்து மனிதர்கள் கூட்டங்கூடி வசிக்க ஆரம்பித்ததாலும் கூட்டு வாழ்க்கை ஏற்படுத்திக்கொண்டதாலுமேதான். கடவுளைப்பற்றிய எண்ணம் சமூக உணர்ச்சியை மங்கவும் மருங்கவும் செய்து உயிருடன் இருக்கும் சமூகத்தாரின் நன்மைக்கு பதிலாக இறந்து போனவர்களுடைய நன்மையை பிரதானமாகக்கொண்டுளது.

கடவுளைப்பற்றிய எண்ணத்திற்கு எப்பொழுதும் அடிமைத்தனமே, அதிலும்மிகவும் மோசமான ஆதரவற்ற அடிமைத்தனமே அடிப்படையாய் இருந்து வந்திருக்கிறது. கடவுளைப்பற்றிய

வண்ணம் ஒருக்காலும் சமூகத்தையும், தனி நபரையும் ஒன்று படுத்தி பந்தப்படுத்தியதில்லை, ஒடுக்கப்பட்ட வகுப்பார் தங்களை அடக்கி ஆளும் வகுப்பாருக்கு தாங்களாகவே அடங்கி நடப்பதை தெய்வீகத்தன்மை என்று கடவுளைப்பற்றிய எண்ணம் போதித்து வந்தது. தங்களுடைய வியாக்கியானம் பணக்கார வகுப்பை ஆதரிப்பது விஞ்ஞானத்திற்கும், சரித்திரத்திற்கும் முரண்பட்டது. ஏனெனில் அது பொதுவாக ராபின்சன் குருசோ எண்ணியமாதிரி உள்ள எண்ணங்களைப்பற்றி கூறுகிறதே ஒழிய ஸ்திரமாக சரித்திர பூர்வகமாக ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட வகுப்புகளைப்பற்றிக் கூறவில்லை.

கடவுளைப்பற்றிய எண்ணத்தை (Syrian) சிறியன் முதலிய காட்டுமிராண்டி கூட்டங்களும் காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து சிறிதளவு முன்னுக்குவந்த கூட்டங்களும் நினைப்பது ஒருமாதிரியாகவும் (Struve) ஸ்ட்டர்வேயும் அவரைச் சேர்ந்த கூட்டத்தாரும் நினைப்பது வேறுமாதிரியாகவும் இருக்கிறது. ஆனால் இரண்டு மாதிரிகளிலும் இந்த எண்ணம் வகுப்பு ஆதிக்கத்தையும், ஆட்சியையும் விருத்தி செய்யப்படுவதோடு வகுப்பு ஆட்சியால் இந்த எண்ணமும் விருத்தி ஆக்கப்படுகிறது. பொது மக்கள் சிறு சிறு கடவுள்களைப்பற்றியும், தெய்வீகத்தைப்பற்றியும் கொண்டிருக்கும் எண்ணங்களுக்கு அவர்களுடைய அறியாமையே காரணம். அந்த அறியாமையின் காரணத்தினாலேயே சாரைப்பற்றியும், (அரசனைப்பற்றி) பூதங்களைப்பற்றியும், பெண்களுக்கு பேய்பிடிப்பதைப்பற்றியும் அவர்கள் தப்பெண்ணங்கள் கொண்டிருக்கிறார்கள். பொதுஜனங்கள் கடவுளைப்பற்றி கொண்டிருக்கும் தப்பெண்ணத்தை தாங்கள் எப்படி ஜனநாயகத்தின் குணமாகக் கருதுகிறீர்கள் என்று எனனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

தத்துவஞானிகளுக்குள் ஆத்மவாதிகள்தான் "தனிஜீவனுடைய நன்மையை எப்பொழுதும் கருதுகிறவர்கள்" என்று சொல்லுவது உண்மையல்ல. (Gassendi) காசண்டியை விட (Descartes) டேக்கார்ட்ஸ் தனி ஜீவனுடைய நன்மையில் அதிக அக்கரைகொண்டிருந்தாரா? அல்லது (Fearbach) பூர்பக்கை விட (Fichte) பிகட்டியும் (Hegal) ஹகலும் அதிக அக்கரை எடுத்துக் கொண்டார்களா?

மேலும் தாங்கள் என்ன எழுதுகிறீர்கள் என்றால் "கடவுளை சிருஷ்டி செய்வது என்பது சமூகத்திலும், தனி நபரிடத்திலும் ஏற்படும் சமூகக்கொள்கைகளைத் திரட்டி மேலும் மேலும் பரிணமிக்கச்செய்வதாகும்" என்பதாக எழுதுகிறீர்கள். இந்த இடம் மிகமிக மோசமானது! ரஷியாவில் சுயேச்சை இருந்தால் பணக்கார வகுப்பு முழுவதும் தங்களுக்கு மிகவும் பொருத்தமான இந்த சமூகக்கொள்கையையும், மதக்கொள்கைகளையும் ஏற்படுத்திக் கொடுத்ததாக தங்களை மிகவும் வாழ்த்தி இருப்பார்கள். ஆகவே தற்சமயம் இவ்வளவு தூரம் நான் எழுதியதே போதுமானதென நினைக்கிறேன். ஏற்கனவே இக்கடிதம் மிகவும் நீண்டு விட்டது.

மறுபடியும் தங்கள் கையைக்குலுக்கி தாங்கள் தேக சௌக்கியத்தோடு இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

தங்கள்
V. U.

இது 1913ல் எழுதப்பட்டு 1924-ல் லெனின் திரட்டு முதலாவதில் பிரசுரிக்கப்பட்டது.

---

## 7-ம் அத்தியாயம்.

## பொது உடமைக் கொள்கையும் ஒழுக்கமும்.

### லெனின் பேசியது.

(192 ம் வருஷம் அக்டோபர் மாதம் 3ந்தேதி 3-வது அகில ருஷிய கம்சமால் காங்கிரசில் லெனின் பேசிய பேச்சு.) (கம்சமால் என்பது பொது உடமைக் கொள்கையை ஏற்ற இளைஞர்கள்.)

இளந்தோழர்களே!

"முதலாவதாக நான் இவ்விடத்தில் பொது உடைமைக் கட்சியார் ஒழுக்கத்தைப் பற்றி கொண்டுள்ள கொள்கையைக் குறிப்பிடுகிறேன்.

தாங்கள் யாவரும் பொது உடமைக்காரராக பழகிக்கொள்ள வேண்டும். இளம் கம்யூனிஸ்ட் சங்கத்தின் வேலை என்னவென்றால் படிப்பதிலும், ஸ்தாபனங்களை அமைப்பதிலும், தங்கள் தங்கள் சங்கத்தை உறுதிப்படுத்துவதிலும், யுத்தம் நடத்துவதிலும் தங்களையும் தங்களைத் தலைவராகக் கருதுகிறவர்களையும் தயார்செய்வதற்கு தங்கள் வேலைத்திட்டத்தை திடப்படுத்திக் கொள்ள வேண்டியதாகும். இந்த வழியில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆள்களைப் பழக்கி சேர்க்கப்படும் தற்காலத்திய இளைஞர்களை பழக்குவதும், அறிவூட்டுவதும் படிப்பிப்பதும் ஆகிய வேலைகளை எல்லாம் பொது உடைமை ஒழுக்கக் கொள்கைகள் அவர்களுக்குப் படியும் படியான மார்க்கத்திலேயே செய்து வர வேண்டும்.

ஆனால் பொது உடமை ஒழுக்கக் கொள்கை என்று தனியாக ஒன்று இருக்கிறதா என்ற கேள்வி பிறக்கலாம். ஒழுக்கத்திலேயே பொது உடமை ஒழுக்கமென்று ஒரு வகை இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக அப்படி ஒன்று இருக்கின்றது என்று தான் சொல்லுவேன். நமக்கு "ஒழுக்கக் கொள்கைகளே கிடையாது" என்று அடிக்கடி நமது எதிரிகளால் சொல்லப்படுகின்றது எப்படியென்று "பொது உடைமைக்காரர் ஒழுக்கத்தையே மறுக்கிறார்கள்" என்பதாக பணக்கார வகுப்பார் அடிக்கடி சொல்லிவருகிறார்கள். உண்மையை மறைத்துத் தொழிலாளர் குடியானவர் ஆகியவர்கள் கண்களில் மண்ணைப் போடுவவதற்கு பணக்கார வகுப்பார் செய்யும் சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று.

நாம் எந்த முறையில் ஒழுக்கக் கொள்கைகளையும், ஒழுக்கத்தையும் மறுக்கிறோம்? என்றால் பணக்கார வகுப்பார் எந்த முறையில் அவைகளை போதிக்கிறார்களோ அதாவது "கடவுளுடைய ஆக்கினையின் மூலம் ஒழுக்கங்கள் ஏற்படுவதா"க சொல்லுகிறார்களோ அந்த முறையில் தான் நாம் ஒழுக்கங்களை அப்படிப் பட்டதல்ல என்று மறுக்கிறோம். நாம் கடவுளை நம்புவதில்லை என்று நிச்சயமாகச்சொல்லுகிறோம். பாதிரிகளும், நிலச்சுவான்தாரர்களும் பணக்கார வகுப்பாரும் ஆகிய இவர்கள் எல்லாம் தங்கள் சுய நன்மையை காப்பாற்றிக் கொள்ளவும் பாடுபடுபவர்களைக் கொள்ளை அடிக்கவுமே கடவுள் பேரால் பேசுகிறார்கள் என்பதை நாம் நின்றாய் அறிந்திருக்கிறோம். சில சமயம் இவர்கள் தங்கள் ஒழுக்கக் கொள்கைகள் கடவுள் ஆக்கினையில் இருந்து பிறப்பதாகச் சொல்லுவதை விட்டு விட்டு, ஆன்ம வாதத்தில் முழுதுமோ பகுதியோ நம்பிக்கை வைத்தவர்களுடைய சொற்களை உபயோகப்படுத்தி அவற்றின் மூலம் தங்களின் நன்மைக்கு வேண்டிய மாதிரி ஒழுக்கத்தை கற்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த ஆன்ம வாத சொற்களுக்கும் தெய்வீக ஆக்கினைகளுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லை.

மனித சக்திக்கும் மீறியதாகக் கருதப்படும் எண்ணங்களில் இருந்தாவது வகுப்புபேதத்தை (அதாவது முதலாளி தொழிலாளி என்கின்ற பேதத்தை) உணராத எண்ணங்களில் இருந்தாவது பிறக்கும்ஒழுக்கம் என்பதை நாம் ஒப்புக் கொள்வதில்லை என்பதோடு அப்படிச் சொல்வதெல்லாம் ஏமாற்றமும் மோசடியுமேயாகும் என்றும் நிலச்சுவான்தாரர் பணக்கார வகுப்பார் ஆகியவர்களுடைய நன்மைக்காக தொழிலாளர்கள் குடியானவர்கள் ஆகியவர்கள் கண்களில் மண்ணை போடுவதாகும் என்றும் கூசாமல் சொல்லுவோம்.

வகுப்புப் போரில் தொழிலாளர்களுடைய நன்மையையே பிரதானமாகக் கருதுவதுதான் நமது ஒழுக்கம் என்று நாம் சொல்லுகிறோம். தொழிலாளர் நடத்தும் வகுப்பு யுத்தத்திற்கு ஏற்படும் நன்மைக்கும் அவசியத்திற்கும் தக்கவாறே நமது ஒழுக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறோம். பழய சமூக ஒழுங்கில் நிலச்சுவான்தாரனும் பணக்காரனும் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் அழுத்திவைத்து தலையெடுக்க வொட்டாமல் செய்து வந்தார்கள். இவ்விதச்சமூகத்தைத்தான் நாம் அழித்துத் தீரவேண்டியதாயிற்று. இந்த மாதிரி நிலச்சுவான்தாரனையும், பணக்காரனையும் தான் வீழ்த்த வேண்டியதாயிற்று. இந்த நிலச்சுவான்தாரர்களையும், பணக்காரர்களையும் வீழ்த்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. ஆனால் இக்காரியத்தை செய்து முடிக்க சில ஸ்தாபன அமைப்புகள் அவசியமாயிற்று. இந்த அமைப்புகளை கடவுளிடம் சொல்லிசிருஷ்டி செய்து விட முடியவில்லை (இந்த அமைப்புகளை அமைக்க "கடவுள்" இடம் கொடுக்கவுமாட்டார்.)

இப்படிப் பட்ட ஸ்தாபன அமைப்புகள் ஏற்படுத்துவதற்கு தொழில் சாலைகளும் பட்டரைகளும் அவசியமாயிற்று. தங்கள் பழய தூக்கத்தில் இருந்து விழிப்பு எய்திய பழக்கமடைந்த தொழிலாளிகளும் அவசியமாயிற்று. இந்த வகுப்பு உற்பத்தி ஆனபிறகே இன்றைய தினம் காணப்படும் நிலைமைக்கு வந்து சேர ஒரு பொதுஜன இயக்கம் ஆரம்பமாயிற்று. இதன் மூலம் ஏற்பட்ட புரட்சியின் பயனாய் உலகத்திலே மிகவும் பல ஹீனமான ருஷிய தேசத்திலே தொ

ரோஜா முத்தையா

# சமதர்மபிரசுர உதவி நிதி.

## செய்கோன் (Saigon) தோழர் உதவி.

(தோழர் ம. சிங்காரவேலு)

செய்கோன் (Saigon) தோழர்கள் சமதர்ம விஷயமாக எழுதியுள்ள சில நூல்களைப் பிரசுரிக்கும்படியாக ரூபாய் 314—8—0 அனுப்பினார்கள். இன்னும் உதவி செய்வதாகவும் கூறியுள்ளார்கள். இந்த நன்கொடைக்காக நமது செய்கோன் சுயமரியாதைத் தோழர்களை அன்புடன் வாழ்த்துகின்றோம். நமது "குடி அரசில்" சில நாளைக்கு முன் தமிழ் நாட்டு மக்களுககும், மெஞ்ஞானத்தைப் பரவச் செய்ய விருப்பமுடையவர்களுக்கும், வேண்டுகோள் செய்த நிமித்தம் (Saigon Comrades) செய்கோன் தோழர்கள் முதல் முதலில் நம்து நாட்டுக்கு வழிகாட்டியுள்ளார்கள். இவர்கள் முதல் அனுப்பிய தொகையைக்கொண்டு பிரபஞ்ச ஞானமென்னும் (Cosmogony) புத்தகத்தை அச்சிட ஆரம்பிப்போம். இதில் அனேகபடங்கள் அச்சிடப்படும். இந்த நூலுக்கு ஆதாரமாகக்கொண்ட நூல்களையும் விபரமாகக் குறிப்பிக்கப்படும். இந்தப்புத்தகம் முடிந்த பிறகு மற்ற கையேட்டுப் புத்தகங்களையும் கிரமமாக அச்சிடவேண்டும்.

"சமதர்ம விளக்கமென்ற" நூல் ஒன்று தமிழில் எழுதிவைத்துமிருக்கின்றோம். சமதர்மத்தைபபற்றிய நூல்கள் விசேடமாக மேல் நாட்டில் பிரசுரமாய் வருங்காலையில் நமது நாட்டில் ஒரு புத்தகமாயினும் இல்லாமை மிகவும் வருந்தத்தக்கதே. இந்தக்குறையை நீக்கவேண்டி பல ஆங்கில நூல்களை ஆராய்ச்சி செய்து ஒரு நூலை இயற்றியுள்ளோம். இதையும் சீக்கிரம் பிரசுரிக்கவேண்டும்.

"குடி அரசில்" நாம் கடந்த வருஷங்களாக எழுதிவந்த கட்டுரைகளையும் அச்சிடவும் வேண்டும். கடவுளும், பிரபஞ்சமும் என்ற சிறு நூலை இரண்டாம் பதிப்பும் செய்வதாக யோசனை. அச்சிறு புத்தகம் அச்சிட்ட பிறகு, விஞ்ஞானம் சிறு விஷயங்களில் தீவிர விருத்தி அடைந்திருப்பதால் அதனையும் அச்சிறு புத்தகத்தில் அடக்கி இரண்டாம் பதிவு செய்யவும் வேண்டும். சமதர்ம விஷயமாக பிரசுரித்த புத்தகங்கள் "சுயராஜ்யம் யாருக்கு?" என்ற முதல் பாகம் 5000 காப்பி வரை விற்றதாகத்தெரிகிறது. அதன் இரண்டாம் பாகமும் அச்சிடவேண்டுமென்று பலர் கேட்கின்றார்கள். நமது தோழர் பட்டுக்கோட்டை பி. எஸ். தண்டபாணியை நமது கையேட்டுப் பிரதியை அனுப்பும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அது வந்தவுடன் அதனையும் அச்சிடுவோம்.

எந்த இயக்கமும் முன்னேற்றமடைவதற்கு மூலகாரணமாகவுள்ளது தகுந்த இலக்கியங்களே. இயக்கத்தில் பாடுபட்டு வரும் தோழர்களுக்கு ஞான முண்டாக்கச்சிறந்த நூல்களை மொழிப்பெயர்ப்புச்செய்யவேண்டியதின் அவசியத்தை இங்கு வற்புறுத்த வேண்டியதில்லை. பொது ஜனங்களும் தற்கால ஞானத்தை தத்தம் பாஷையிலேயே பெறுவதற்கு உபகாரமாக இருக்கும் நூல்களை இயற்றல் அவசியமாகும். "குடி அரசு" பிரசுரங்கள் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் நிறைந்து இருக்கவேண்டும். இத்தியாதி காரணங்களால் தமிழில் அரிய நூல்களை எழுதி தமிழ் மக்களுக்கு அறிவை விருத்தி செய்ய முயற்சிப்போருக்கு உதவி செய்துவரும் நமது தோழர்களுக்கு நாம் வேறு கைமாறு செய்ய பாக்கியம் பெற்றிலேம். திரும்பவும் நமது செய்கோன் தோழர்களுக்கு நமது மனமார்ந்த ஆசி கூறுதும்.

குறிப்பு:—சமதர்ம பிரசுரங்களுக்கு உதவியாக வரும் தொகைகளை அப்போதைக்கப்போது பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்படும் வரவு செலவு கணக்கும் நமது "குடி அரசிலும்," மற்ற சுயமரியாதைப்பத்திரிகைகளிலும் பிரசுரமாகும்.

சமதர்ம பிரசுரங்களுக்கு உதவி நிதி அழித்தோர் விபரம்.

தோழர்கள்

| | | |
|---|---|---|
| ம. சிங்காரவேலு மதராஸ் | | 25—0—0 |
| ம. க. அழகப்பா சைகோன் | | 80—3—0 |
| ஆர். எம். சிதம்பரம் | ,, | 55—1—6 |
| என். இராமநாதன் | ,, | 39—5—0 |
| பி. எல். இராமநாதன் | ,, | 18—14—0 |
| வி. சிதம்பரம் | ,, | 15—11—6 |
| எஸ். பி. காசிவிஸ்வநாதன் | ,, | 15—11—6 |
| எ. கோவிந்தன் | ,, | 15—11—6 |
| பி. ஆர். அருணசலம் | ,, | 15—11—6 |
| எம். நாராயணன் | ,, | 15—11—6 |
| இ. லாரெண்ட் | ,, | 15—11—6 |
| எஸ். இராமநாதன் | ,, | 15—11—6 |
| எம். நாகப்பன் | ,, | 11—0—0 |
| வரவு ரூபாய் | | 339—8—0 |

## திருப்பூர்

### தாலூக போர்டு தலைவர்தேர்தல்.

திருப்பூர் தாலூகா போர்டு தலைவராக தோழர் ஆர். வி. ராமசாமிக்கவுடர் அவர்கள் தேர்தெடுக்கப் பட்டார்

ஒரு நிருபர்

## காந்தியாரின் தீண்டாமைஒழிப்பு.

தீண்டாமை ஒழிப்பா? நிலைப்பா என்று சென்ற வாரம் நாம் தலையங்கம் எழுதியிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும். அதறகு பதில், அல்லது சமாதானம் என்று கருதும்படி தோழர் காந்தியவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கையிலும், மோர்வி மாஜி திவானுக்கு அளித்த பதிலிலும் காணப்படும் அடியிற்கண்ட விஷயங்கள் நமது கருத்தை ஊர்ச்சிதப் படுத்துவதாக இருக்கின்றதா? இல்லையா என்பதைச் சற்று கூர்ந்து கவனிக்கும்படி வாசகர்களை வேண்டுகின்றோம். தோழர் காந்தியார் கூறுவதாவது:—

"நான் கலப்பு மணத்தையும், சமபந்தி போஜனத்தையும் ஆதரிப்பதில்லை." (ஏன்?)

"சுத்தமில்லாமல் இருப்பவர்களையும், மாட்டுமாமிசம் சாப்பிடுபவர்களையும் ஆலயத்துக்குள் பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாது என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன்" என்று கூறி இருக்கிறார்.

காந்தியார் அறிக்கை கூறுவதாவது:-

என்து ராஜி பிரேரேபணையை யார் கண்டித்தாலும் நான் வாப்பீசு வாங்கிக் கொள்ளப் போவதில்லை.

"மத விஷயத்தில் நிர்ப்பந்தமென்பது இருக்கக் கூடாது."

மத விஷயத்தில் பிறர் கொண்டுள்ள நம்பிக்கையை முக்கிய விஷயத்திற்கு இணங்கிய அளவுக்கு மதித்து நடக்க வேண்டும்.

ஹரி ஜனங்களுடைய ஆலயப்பிரவேசத்தை ஆட்சேபிக்கின்றவர்களும் மத சம்பந்தமான மன சாந்தியை அடைய உரிமைபெற்று இருக்கிறார்கள்.

ஆதலால் அவர்களுக்கு உரிய அந்த மன சாந்தியை பாதிக்காத மாதிரியில் தான் ஒரு ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும்.

கோவிலுக்குள் சில ஜாதியார் சென்றால் அங்குள்ள விக்கிரகத்தின் சக்தி குறைந்து போகின்றது என்கின்ற உணர்ச்சி பலருக்கு இருந்து வருகின்றது.

அம்மாதிரி உணர்ச்சி உள்ளவர்களை சட்டத்தைக் கொண்டோ, ஆயுதத்தைக் கொண்டோ, பலவந்தத்தைக் கொண்டோ விடும்படி செய்வது என்பது முடியாத காரியம். (அப்படி ஆனால் பின் எதற்காக பட்டினியும், மெஜாரிட்டி கையெழுத்தும் "சுப்பராயன் மசோதா"வும்?)

இந்து மதத்தில் தங்களுக்குஉள்ள அந்தஸ்த்தை நிலைநாட்டிக் கொள்ளுவதற்காக ஒருவர் பெற்றிருக்கும் நியாயமான கோரிக்கைகளை அவருக்கு மறுத்து அவர்கள் மனதை புண் படுத்துவதை ஹரி ஜனங்கள் விரும்ப வில்லை என நான் கருதுகிறேன்.

(அப்படியானால் பார்ப்பனர்களை பூதேவர்கள் என்று ஒத்துக் கொள்ள வேண்டியது தான்.)

சம்ரோக்ஷணை என்பது ஆட்சேபகரமான காரியம் தான் அதை ஒப்புக்கொள்ளுவது தீண்டாமையை ஒப்புக் கொண்டதாகும். என்றாலும் இதை ஒப்புக் கொள்ளுவது வைதீகர்களுக்கு காட்டும் ஒரு தயவாக இருக்கும்.

மனித வர்க்கத்தில் தீண்டாமை என்பது ஏதாவது ஒரு ரூபத்தில் சகஜமாக இருந்து தான் தீரும்.

அது மனிதனுடைய தொழில் அல்லது நடத்தையைப்பொருத்ததாக இருக்கும். அப்படிப்பட்ட தீண்டாமையை ஒழிப்பது இந்த இயக்கத்தின் நோக்கமல்ல. என்று எழுதி இருக்கிறார்.

இது 12—1—33 சு-மி பத்திரிகையில் காணப்படுகின்றது. இதிலிருந்து ஹரிஜன கோவில் பிரவேசத்தின் யோக்கியதையும், தீண்டாமை விலக்கின் தத்துவத்தையும், மதக்கொடுமையை ஒழிக்கும் சம்மதத்தையும் தோழர்களே யூகித்தறிந்து கொள்ளுவீர்களாக.

## "சுப்பராயன் மசோதா" வின் இரகசியம்.

டாக்டர் சுப்பராயன் அவர்களின் மசோதாவானது தீண்டாமை ஒழிப்பு விஷயத்தில் ஏதோ பிரமாதமான நன்மை செய்துவிடப்போவதாக ஜனங்களுக்குள் பிரசாரம் செய்யப்பட்டு வருவதைப்பற்றி முன் ஒரு குறிப்பு காட்டி இருந்தோம்.

அதன் இரகசியம் என்ன என்பதும், எதற்காக அந்தப்படி பிரசாரம் செய்யப்படுகின்றது என்பதும் அநேகர் அறிந்திருக்கவே மாட்டார்கள். இருந்தபோதிலும் அந்த மசோதாவின் யோக்கியதை என்ன என்பதும் அதனால் என்ன பயன் ஏற்படும் என்பதும் அடியில் குறிப்பிட்ட தோழர் சி. ராஜகோபாலாச்சாரியாரின் இரண்டொரு வாக்கியத்தில் இருந்து ஒருவாறு உணரலாம். அதாவது,

"டாக்டர் சுப்பராயனின் கோவில் பிரவேச மசோதாவை அவர்கள் (வைதீக ஜனங்கள்) எதிர்க்கவேண்டிய அவசியமே ஏற்படாது.

ஹரிஜனங்களை கோவிலுக்குள் விட்டே தீரவேண்டுமென்றும், அம்மசோதா சொல்லவில்லை. அம்மசோதா சட்டமானவுடன் ஹரிஜனங்கள் கோவிலுக்குள் நுழைந்து விடுவார்கள் என்று யாரும் எண்ணிக் கொள்ள வேண்டாம்" என்று 9-1-33-ந்தேதி சுதந்திரச்சங்கு என்னும் பேப்பரில் 5-வது பக்கம் இரண்டாவது கலத்தில் எழுதி இருக்கிறார் இதைப்பற்றி வியாக்கியானம் ஒன்றும் தேவையில்லை என்றே கருதுகிறோம்.

நிற்க இந்த விளம்பரத்தின் இரகசியம் என்ன என்பது பற்றி மற்றொரு சமயம் வெளியாகும்.

# நாடார்குல மகாநாடு.

## தோழர் எம். எஸ். பி. செந்திக்குமார் அவர்கள் சொற்பொழிவு

தோழர்களே!

இன்றைய உலகமானது பல துறைகளிலும் மனிதன் விடுதலையும், முழு சுதந்திரமும் பெறுவதற்கு முயற்சிக்கும் காலமாயிருக்கின்றது. மனிதனால் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை என்கின்ற எண்ணம் தோன்றி விட்டது. ஆனால் நமது பாரத நாட்டில் மனிதனால் மனிதனுக்கு ஏற்படுத்திய தாழ்மைகளையும் கொடுமைகளையும் நீக்குவதற்கு வழியைக் கண்டிலோம். செயற்கை சட்டங்களை நீக்கமுடியா மானிடர்கள் இயற்கை விதிகளை வெல்வது எங்ஙனம் பகுத்தறிவற்ற விலங்கினங்கள் பிறர் உதவியை நாடாமல் உயிர்வாழ முடியும். ஆனால் பகுத்தறிவற்ற மனிதனே பிறந்த காலமுதல் அந்தியகால வரை பிறர் ஒத்தாசை வேண்டியவனாகவே யிருக்கிறான். இச்சொற்ப விதியை பகுத்தறிவால் சிறிது நோக்கினால் மானிட வர்க்கத்தில் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லையென்றும் மானிட வளர்ச்சிக்கு வேற்றுமையில் ஒற்றுமை காணவேண்டுமென்றும், மனிதனை மனிதன் பிரிக்கும் எப்பேதங்களும் மனித தர்மத்திற்கு இடையூறு விளைவிக்கக்கூடியனவென்றும் தெற்றென விளங்கும்.

### செல்வமும், கல்வியும்.

உலகத்திலே பற்பல தேசங்களை எடுத்துப் பார்க்கும்பொழுது கைத்தொழிலிலும், பொருளீட்டலிலும் எச்சமுதாயம் மேம்பாடடைந் திருக்கின்றதோ அச்சமூகம் தான் உலகத்திலே ஆதிக்கம் செலுத்துகிறது என்பது கண்கூடு உதாரணமாகதொழில் அபிவிருத்தியில் பேர்பெற்ற நமது பிரிட்டிஷ் தேசமானது தனக்கு நிகரில்லை யென்று பிரகாசித்துக்கொண்டிருக்கின்றது. பணம் படைத்த அமெரிக்கா தேசமானது மற்ற நாடுகளையெல்லாம் தனது பணச்செருக்கினால் அடிமைப்படுத்த முயற்சிப்பதை இன்றைய பத்திரிகைகளிலும் நீங்கள் காணலாம். ஆதலின் எந்த சமூகம் பணம் திரட்டலில் செல்வாக்குப் படைத்திருக் கின்றதோ அதுவே தேச ஆதிக்கத்திலும் வலுவுற்றிருக்கு மென்பதில்சந்தேகமில்லை. பம்பாயில் சிறிய சமூகத்தினராகிய பாரசீகர்கள் அரசியல் உலகத்திலும் பொருளாதார உலகத்திலும் ஆதிக்கம் பெற்றிருப்பதை யாரால் மறுக்க முடியும்? தென்னாட்டில் தனவைசியர்கள் அரசியலில் ஆதிக்கம பெற்று வருவதைக் காண்கிறோம். தொகையில் சிறியவராகிய பிராமணர்களும், மலையாளிகளும் தங்களுடைய கல்வியபிவிருத்தியால் பல வழிகளிலும் பணம் சேகரித்து அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருவதில் ஆக்ஷேபனை உண்டா என்று கேட்கின்றேன்.

பள்ளிக்கூடங்களை எற்படுத்தி பிள்ளைகளை பள்ளிக்கனுப்ப பாடுபட்ட காலம்போய், படித்த பட்டதாரிகளுக்குப் பதவிகிடையாமல் பரிதவிப்பதைப் பார்த்து வருந்தாமலிருக்க முடியவில்லை. ஆயினும் நாம் நமது கல்வியின் நோக்கத்தை திருத்துவதே முதற்கடமையாகக் கொள்ள வேண்டும். பல வழிகளிலும் சுதந்திரம் அதிகரித்துவரும் இக்காலத்தில் நமது மக்களில்எழுதபடிக்கத்தெரியாதா நபர்யாரும் இல்லை யென்று சொல்லும் வண்ணம் கட்டாய ஆரம்பப் படிப்பை பரப்புவதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலைகள் எற்படுத்துவது மிகவும் அவசியம்.

### சமுதாய சீர்திருத்தம்

மனிதனுக்கு மனிதன் அடிமையல்ல; ஆணுக்கும் பெண்ணுக்கும் சகலத்திலும் சமஉரிமையுண்டு. பகுத்தறிவுக்கொவ்வாத எவ்வித கோட்பாடும் உதரித் தள்ளப் படவேண்டியது தான் என்று ஒப்புக் கொள்ளப்பட்டு வரும் இந்நாளில், சமூக சீர்திருத்தத்தைப்பற்றி குறிப்பாகச் சொல்ல வேண்டியது 'ஒன்றுமில்லை யென்று கருதுகிறேன். மானிட வர்க்கம் பூராவும் ஒன்று என்று பல மேதாவிகளாலும் பிரசாரம் செய்யப்பட்டு வரும் இக்காலத்திலும் கூட நம்மவர்களுக்குள்ளே உயர்வு தாழ்வு இருப்பது நியாயமா? ஆடவர்கள் அனுபவித்துவரும் உரிமைகளைச் சிறிதளவாவது பெண்களுக்குக் கொடுக்காமலிருப்பது தருமமாகுமா? காலுக்குதவாத செருப்பு போல காலத்துக் கொப்பாத அடிமை புத்தியை திருத்திக் கொள்ளாமலிருப்பது நமது சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்காதா?

### அரசியல் புதிய சீர்திருத்தம்

நமது நாட்டிற்கு புதிய அரசியலை அமைப்பதற்கு வட்டமேஜை மகாநாடு மூன்றும் முறை கூடியது தங்களுக்குத் தெரிந்த விஷயமே; முடிவு எப்படியிருந்த போதிலும் இன்னும் ஒரு வருஷத்திற்குள் புதிய அரசியல் அமைப்பு எற்படுவது நிச்சயம்.

வருங்கால அரசியலமைப்பில் அதிக சுதந்திரம் கொடுக்கப்படுமாகையால், அவ்வமைப்பிலும் நமக்குரிய பங்கை எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய சாதனங்களை வழிகாட்டுவீர்களென்று எண்ணுகிறேன்.

### கோவில் பிரவேச மசோதா

இந்தியாவிலுள்ள கற்கோவில்கள் எல்லாம்ஜாதி, மத பேதங்களைக்கற்பிக்கும் 'கலங்கரை' விளக்கமாக இருக்கின்றன.

இப்பேர்ப்பட்ட ஸ்தலங்களைப்பற்றி கொண்டு வரப்பட்ட மசோதாவைப் பற்றி ஒரு விஷயம் மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். சுயநலங்கொண்ட, குறுகிய நோக்கம் படைத்த சிலரின் வீண் பொய்க்கூற்றுக்கு சுதந்திர தேவியை பெருமை கொண்டாடும் ஆங்கிலேய அரசாங்கத்தார் செவி கொடுத்து ஏமாந்து போகமாட்டார்களென்று எண்ணுகிறேன். பல மாகாண கவர்ன்மெண்டார் களினுடைய அபிப்ராயங்களைத் தெரிந்து இந்திய கவர்ன்மெண்டார் செய்யப்போகும் முடிவை தேசமக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கலாம்.

சகோதரர்களே! சகோதரிகளே!!

இவ்வளவு நேரம் என் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்திருந்த தங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். தேசிய காலத்தில் ஜாதிய மகாநாடு உண்டா என்று எண்ணம் புரிவாரும் உண்டு. ஆனால் ஜாதி மதபேதங்கள் இருக்கும் வரை இப்பேர்ப்பட்ட ஜாதிய மகாநாடுகள் அவசியந்தான் என்று தைரியமாகச் சொல்லுங்கள். நம் காலிலே நாம் நின்று நம்முடைய ஆதிக்கத்தைப் பெருக்கினால்தான் மற்றவர்கள் நமக்கு மரியாதை கொடுப்பார்களென்பது அனுபவ சித்தாந்தமல்லவா? நமக்குள் எந்தவித அபிப்பிராய பேதங்களும் விவகாரங்களும் வந்த போதிலும், சமூகத்தைப் பாதிக்கும் பொழுது பிறருக்கு இடங்கொடாமல் நமது மரியாதையை நிலை நாட்டுவதற்கு வாலிபர்களே ஒன்றுபட முன்வாருங்கள்.

சகோதர பிரதிநிதிகளே! முடிவாக ஒன்று சொல்லுகிறேன் ஜப்பான் தேசத்திலும் ரஷியா தேசத்திலும் பெண்கள் ஆயுதந்தாங்கிப் போர் வீரராகிறார்கள். இங்கிலாந்தில் பெண்கள் மந்திரிகளாக விளங்குகின்றார்கள். துருக்கி தேசத்திலோ தேச நிருவாகத்தில் பல வகையிலும் பெண்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். ஆடவர்களுக்குச் சமமாக பெண்கள் மற்ற நாடுகளில் தேச சேவை செய்ய முன் வந்திருக்கும் இக்காலத்தில் நமது சமூகத்தினரும் நியாய வழிகளிலும் நிதான போக்கிலும் தயங்காது உழைக்க முன் வருவார்களென்று எதிர்பார்க்கின்றேன்.

அன்பர்களே! மறு முறையும் உங்களுக்கு வந்தனத்தை செலுத்தி அமருகின்றேன்.

---

சிறுவர்களுக்கு

# சமதர்ம வருஷத்திட்டம்.

## சுயமரியாதைச்சிறுவர்களுக்கு வாய்ப்பாடம்.

## (Socialist year's Plan for Young men.)

(தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,)

காலையில் எழுந்திருக்கும்போதே இந்தப்பாடத்தை ஒவ்வொரு சுயமரியாதைச் சிறுவரும் ஒப்பிக்கவேண்டும். இதனை ஒப்புவிக்க, ஒப்புவிக்கஇதுவே மனப்பாடமாய்விடும். மனப்பாடமானதும் செய்கைப்பாடத்திற்குக்கொண்டுபோகும். இதுதான் சுயமரியாதைச் சிறுவர்களுக்கு "பிரார்த்தனையும், ஜெப"முமாகும்.

1 ஒரு வருஷத்திற்குள் "குடி அரசுக்கு" பத்து சந்தாதாரர்களைச் சேர்க்கின்றேன்.

2. என்னால் கூடியவரையில் "குடி அரசில்" கண்டுள்ள சமதர்மக் கொள்கைகளை பரவச்செய்கின்றேன்.

3. தொழிலாளருக்கும், குடிமக்களுக்கும் சுத்தம் சுகாதாரத்தைப் பற்றிய அவசியத்தை விளங்கச்செய்கின்றேன்.

4. மாதத்திற்கு ஒரு நாள் அடுத்த கிராம சுகாதாரமாக நாகைதாளி, அழுக்கு முதலிய அசுத்தத்தை நானே எடுத்துப்போடுகின்றேன்,

5. வருஷமொன்றுக்குள் படிக்கத்தெரியாத ஐந்துபேரைப் படிக்கவைக்கின்றேன்.

6. குளக்கரை, எரிக்கரை, நதிக்கரை, கடற்கரை முதலிய கரையோரங்களில் அசுத்தம் செய்யாதபடி பாமர ஜனங்களுக்குத்தெரிவிக்கின்றேன்.

7. தாழ்த்தப்பட்ட மக்களின் குழந்தைகளை அன்றாடம் கழுவி, சுத்தமாக வைக்கும்படி தாய்மார்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

8. கிராம அதிகாரிகளை இரவில் கிராமத்தில் விளக்குப் போடும்படி வற்புறுத்துகின்றேன்.

9. அக்கம் பக்கத்திலுள்ள கொசு, கருப்பான் பூச்சி முதலிய விஷப்பூச்சிகளை விருத்தியாக வொட்டாமல் செய்கின்றேன்.

10. ஆடு, மாடு, கோழி வளர்க்கும் இடங்களை சுத்தமாக வைக்கப் பாடுபடுகின்றேன்.

# கொள்ளை! கொள்ளை!! பகற்கொள்ளை!!!

## சென்னையில் பகற்கொள்ளை.

(எவன் எழுதினலென்ன?)

ஓ! மூட சிகாமணிகளே! இரண்டு மூன்று மாத காலமாய் ஒரு பார்ப்பனர் சென்னையில் இருந்து கொண்டு, தன்னை சங்கராச்சாரி என்றும், லோக குருவென்றும், சுவாமிகளென்றும், அவதார புருஷ பரம்பரை என்றும் சொல்லிக் கொண்டும், பல பார்ப்பனர்களை ஏவிவிட்டு அந்தப்படியே சொல்லி பிரசாரம் செய்ய செய்துகொண்டும், உங்களுடைய பணங்களை காணிக்கைப் பிச்சையென்னும் பேரால் தினம் 500, 1000, 2000, 3000, 5000, 10000 என்பதாகக் கொள்ளை அடித்துக் குதிரில் போட்டுப் பார்ப்பனா களுக்கு, அதாவது நம்மைச் சூத்திரன் என்றும் நாலாவது வருணத்தான் என்றும், அடிமை என்றும், பல ஜாதிக்கலப்பால் பிறந்த மக்கள் என்றும், சண்டாளர்கள் என்றும், நம்மைத்தொட்டால் குளிக்கவேண்டுமென்றும் சொல்லும் அயோக்கிய ஆரியப்பார்ப்பனர்களுக்கே மூட்டை மூட்டையாய் பொங்கிப்பொங்கிப் போட்டுத் திரிகின்ற அக்கிரமங்களையெல்லாம் சகித்துக்கொண்டிருக்கின்றீர்களே! உங்களுக்கு மானமில்லையா! வெட்கமில்லையா!! சுயமரியாதை உணர்ச்சியில்லையா!!!

நமது நாட்டு அயோக்கியப்பணக்காரர்களும், கொள்ளைக்கார, கொடுமைக்கார, வன்னெஞ்சப்பணக்காரர்களும் எவ்வளவு இழிவாய்—பித்தலாட்டமாய்—மோசடியாய்பணம் சம்பாதித்து அந்தப்பணங்களையெல்லாம் எந்த அறிவீனர்களிடம்—பாமரஜனங்களிடம்—ஏழைகளிடம் இருந்து சம்பாதித்தார்களோ அவர்களுக்காக சிறிதும் பயன்படுத்தாமல், மேற்குறிப்பிட்ட அந்த சோம்பேரிக் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவருக்கும் நம்மைச் சூத்திரர்கள், நாலாம் வருணத்தார்கள், சண்டாளர்கள் என்றழைக்கும் மிலேச்சப்பார்ப்பனர்களுக்குமே அழுகின்றார்களே; இதன் சூட்சியும், இதிலுள்ள புரட்டும் உங்களுக்கு விளங்குகின்றதா? நன்றாய் யோசித்துப்பாருங்கள். இந்தப்பணக்காரர்கள் எல்லாம் ஏழைகளின் குடும்பங்களைக்கெடுத்து—அவர்கள் வீடு வாசல்களைப் பிடுங்கிக்கொண்டு நடுத்தெருவில் பிள்ளை குட்டிகளுடன் அலையச்செய்து விட்டு—பட்டினியினால் மடியச் செய்து விட்டு சம்பாதித்த பணங்களை இந்த சோம்பேரிக் கூட்ட பார்ப்பனர்களுக்கு அழுவதென்றால் அதில் ஏதாவது இரகசியம் இருக்குமா இருக்காதா? என்பதை யோசித்துப்பாருங்கள். அது என்னவென்றால் அதுதான் உங்களை மறுபடியும் மறுபடியும், மேலும் மேலும் கொள்ளையடிப்பதற்கு—வஞ்சிப்பதற்கு—உங்கள் குடும்பங்களைக்கெடுத்து வாழ்வதற்கு—உங்களைப் பட்டினி போட்டு பணம் சேர்ப்பதற்காக செய்யப்படும் சூட்சியாகும்.

எப்படியென்றால் சங்கராச்சாரிக்கு பணத்தைக்கொடுத்து, பெண்டு பிள்ளைகளுடன் அவர் காலில் விழுந்து அவர் கால் கழுவிவிட்ட தண்ணீரை வாங்கிக்குடித்து தலையில் தெளித்துக்கொண்டால் முன் சொன்னபடி அவன் எப்படிப்பட்ட கொள்ளைக்காரனுனாலும், கொலைகாரனானாலும் எத்தனை குடும்பங்களைக்கெடுத்துக் குட்டிச்சுவராக்கினவனானாலும், மகாப்பிரபு, தர்மவான், தர்மப்பிரபு என்று பார்ப்பனர்களாலும், அவர்கள் பத்திரிகைகளாலும், அழைக்கப்பட்டு விடுகிறான். இதனால் இந்தப்பணக்காரர்கள் செய்யும் புரட்டுகளும், அயோக்கியத்தனங்களும் எல்லாம் மறைந்து விடுகின்றன. சற்றும் மானம், வெட்கம் இல்லாமல் இவர்கள் மறுபடியும் பொது ஜனங்கள் முன்னிலையில் வந்து நிற்பதற்கு தைரியமும் ஏற்பட்டு விடுகின்றன. நமது மூட மக்களும், அந்தப்பணக்காரனை மகாப்பிரபு என்றும் தர்மப்பிரபு என்றும், லட்சுமிபுத்திரன் என்றும் அழைக்க ஆரம்பித்து விடுகின்றார்கள். இந்த மாதிரி பித்தலாட்டத்திற்காக தான் மேற்கண்ட பணக்கார கொள்ளையன் சங்கராச்சாரிக்குப் பணத்தையும் கொடுத்து மற்ற காரியத்தையும் செய்கின்றார்கள்.

ஆகவே நம்மை சூத்திரன் என்றும், கீழ் ஜாதி என்றும், பல ஜாதி வித்து கலப்பு என்றும், விபசாரத்தில் பிறந்தவர்களென்றும், சண்டாளர் என்றும், ஒரு கூட்ட அயோக்கியர்கள் சொல்லுவதற்கு மற்றொரு கூட்ட அயோக்கியர்கள் ஆதாரமாய் இருந்து உதவி செய்கின்றார்களா இல்லையா என்பதை கூர்ந்து கவனித்துப்பாருங்கள் என்பதற்காகத் தான் இதை உங்களுக்கு தெரிவிக்க வந்தேன்.

சிறந்த ஓ! சைவர்களே! சங்கராச்சாரி என்றால் யார்? சங்கராச்சாரி கதைப்படி பார்த்தால் அவர் ஒரு "விதவை" பெற்ற பிள்ளை என்று காணக்கிடக்கின்றதா இல்லையா? அவர் "கடவுள் இல்லை" (தானே கடவுள்) என்று சொல்லுகின்றவரல்லவா? சைவர்களுக்கு பிரவி எதிரியல்லவா? தன்னை சந்நியாசி என்று சொல்லிக்கொண்டு யானை, குதிரை, ஒட்டகம், பல்லக்கு முதலாகிய ராஜபோகத்தை அடைந்துகொண்டிருக்கிறவர் அல்லவா? சகலத்தையும் சமமாய் பாவிக்கின்றவர் என்று சொல்லிக்கொண்டு கீழ் மேல் ஜாதியையும் "பிராமணன்" "சூத்திரன்" "சண்டாளன்" என்பதுபோன்ற உயர்வு தாழ்வு இழிவு பிரிவுகளையும் ஆதரித்துக் காப்பாற்றியும், அதற்காக ஆதாரங்களைப் பிரசாரம் செய்து அதை மக்களுக்குள் பரப்புகின்றவரும் அல்லவா? இவர் கொள்கைப்படி எந்த சைவனும் தாசிமகன்—அடிமை—சூத்திரன்தானே இந்தப்படி சொல்லும் இவர்காலில் விழுவதற்கும் காணிக்கை கொடுப்பதற்கும் சாதம் சாப்பிடும் "சைவனுக்கு" அதாவது பகுத்தறிவுள்ள சைவனுக்கு எப்படித்தான் மனம் வந்தது? என்பது நமக்கு விளங்கவில்லை. உண்மையான சைவன்ஸ்மார்த்தப் பார்ப்பனரைக் கண்டால் ஐயோ அந்த தோஷம் தீர உடுத்தினவேஷ்டியுடன் ஸ்நானம் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டு அந்தப்படியே ஆதாரங்கள் இருப்பதாய் பேசிவிட்டு பிறகு சங்கராச்சாரி காலில் பணத்தைக்கொட்டி விழுந்து கும்பிடுவதென்றால், சுயமரியாதைக்கும் நாணயத்துக்கும், பகுத்தறிவுக்கும் இந்த சைவர்களுக்கும் எவ்வளவு சம்மந்தம் இருக்கிறது என்பதை முட்டாள் தனத்தையும், சுயநலத்தையும், சூழ்ச்சியையும் கொண்டு யோசிக்காமல் பகுத்தறிவையும், நேர்மையையும் கொண்டு யோசித்துப் பாருங்கள்.

ஓ! மார்வாடி சேட்டுமார்களே! பணவியாபாரத்தில் பணம் பெருக்கும் "தொழிலாளிகளே!" ஏழை மக்களிடம்—கூலிக்காரர்களிடம்—ஆப்பம் சுட்டு, எருமுட்டை தட்டிப்பிழைக்கும்பெண்களிடம்,—ரிக்ஷா வண்டி இழுப்பவர்களிடம் தினம் 1-க்கு ரூபாய் 1-க்கு ஒரு அணவரைகூட வட்டி வாங்கி பணம் சேர்த்து அந்தப்பணங்களை இந்தமாதிரியான அக்கிரமமான காரியத்திற்காகவா செலவழிக்கவேண்டும் என்று கேட்கின்றேன். இது ஏழைகளை கொடுமைப்படுத்தும் காரியமல்லவா?

அரசியல் சட்டப்படி கொள்ளையடித்து மதக்கொள்கைப்படி மக்களை இழிவுபடுத்தும் காரியமல்லவா நீங்கள் செய்யும் இந்த மோசமானதும் யோக்கியப் பொருப்பற்றதுமான காரியம் என்பதை யோசித்துப்பாருங்கள்.

ஓ! "தேசிய வீரர்களே"! சங்கராச்சாரி விஷயத்தில் நீங்கள் நடந்து கொள்ளும் கவலையற்ற தன்மைக்கு உங்கள் அறியாமை என்னும் முட்டாள் தனம் காரணமா அல்லது வேண்டுமென்றே மௌனமாயிருக்கும் அயோக்கியத்தனம் காரணமா? என்பது விளங்க வில்லையே! ஜவுளிக்கடை மறியலுக்கு இவ்வளவு ஆத்திரப்பட்டு தடி அடிபடுவதும் ஜெயிலுக்குப்போவதுமாய் திரிகின்றீர்களே? இந்த சங்கராச்சாரி கொள்ளைக்கும் அவர் மற்றவர்களைச் செய்யும் இழிவு

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

## வேண்டுகோள்.

சுயமரியாதைச் சங்க கிளைச்சபைகளைப்பற்றி நாம் செய்து கொண்ட வேண்டுகோளுக்கு இதுவரை 30 சங்கத்தார்களே அதாவது 1 துறையூர், 2 ஆனூர், 3 பாளையம், 4 சென்னை, 5 திருமங்கலம், 6 நாகப்பட்டணம், 7 மூதுசாவடி, 8 சாத்தான்கோட்டை, 9 அருப்புக்கோட்டை, 10 ராமநாதபுரம், 11 சேலம், 12 ஆமைமொழி, 13 கத்தூர், 14 பாதூர், 15 நாட்டறம்பள்ளி, 16 திருச்செங்கோடு, 17 வெளிப்பாளையம், 18 கொளப்பு, 19 யாழ்ப்பாணம் பருத்தித்துறை, 20 கண்டி, 21 ஹட்டன், 22 பூவாளூர், 23 சென்னை பெரம்பூர் பாரக்ஸ், 24 திருவட்டத்துறை, 25 மாயவரம், 26 ஈரோடு, 27 கோயமுத்தூர் முதலியவைகளேயாகும்.

இன்னும் மற்ற ஊரிலுள்ள சங்கங்களையும், தயவு செய்து நிர்வாகசபை அங்கத்தினர்கள் பெயர், அங்கத்தினர் எண்ணிக்கையுடன் சீக்கிரம் குறித்தனுப்பக்கோருகிறோம். புதிய சங்கம் அமைக்கவேண்டியிருந்தால் உடனே அமைத்து தெரிவிப்பது நலம்.

[ப—ர்]

# குடி அரசு.

ஈரோடு 1923 ஜனவரிமீ 12-உ


## ஸ்பெயினும், இந்தியாவும்.

——0——

ராஜாவை விரட்டி அடித்த பிறகும் ஸ்பெயின் தேசத்தில் முதலாளிகளுடைய ஆட்சியே 'குடி அரசு' ஆட்சியென்னும் போர்வையைப் போர்த்திக் கொண்டு அதாவது இந்தியாவில் எப்படி சுயராஜ்யம்---தேசியமென்னும் போர்வையை போர்த்திக் கொண்டு முதலாளிகளுடைய ஆட்சிக்கு காங்கிரசின்மூலம்சிறிது காலமாய் அஸ்திவாரம் போடப்பட்டுவருகின்றதோ அது போல் நடந்துவந்தது. இன்னும் அப்படியே நடந்து வருகிறது. என்றாலும் இப்போது அங்கு இந்தமுதலாளிக் குடி அரசு ஆட்சியையும் அழிக்க ஒரு கூட்டம் துணிந்து வெளியில் கிளம்பி வந்து, தேசியத்தையும் ஒழித்து, போலிக் குடி அரசையும் ஒழிக்கப் புரட்சி செய்து பொது உடமை ஆட்சி ஆக்க முயற்சித்து ஒரு அளவுக்கு வெற்றியும்பெற்று வருகின்றதாக தெரிய வருகிறது. ஸ்பெயினைச் சேர்ந்த கட்டலோனியா மாகாணத்தில் சிண்டிகலிஸ்ட் (அனார்க்கிஸ்ட்) அதாவது சர்க்கார் ஆட்சி என்பதே இல்லாமல் எல்லாம் தன்னரசு நாடாகவே இருக்க வேண்டுமென்கின்ற ஒரு வித கொள்கை மீது ஒரு பெரிய இயக்கம் நடந்து வருகின்றது. அந்த மாகாணத்தில் இந்த இயக்க மெம்பர்கள் தான் மெஜாரிட்டியாய் இருக்கிறார்கள். இவர்கள் ஸ்பெயின் தேசிய இயக்கத்திற்கும் "குடி அரசு" (என்கின்ற) இயக்கத்திற்கும் எதிராய் இருப்பவர்கள். ஆனாலும் ஒரு அளவில் பொது உடமை ஆட்சிக்கு சிறிது அநுதாபம் காட்டுகின்றவர்களாய் இருக்கிறார்கள். இந்த பொது உடமைக் கொள்கையிலும் ஸ்பெயின் தேச முழுவதிலுமே இரண்டு கட்சியார்கள் உண்டு. அதாவது ஒரு கட்சியார் இன்று ரஷியாவில் நடக்கும் ஸ்டாலினுடைய பொது உடமைக் கொள்கையை ஒப்புக் கொள்ளுகின்றவர்கள்.

மற்றொரு கட்சியார் ட்ராட்ஸ்கியினுடைய (இவர் முன் லெனினுடன் வேலை செய்து வந்தவர். இப்போது ஸ்டாலினால் நாடுகடத்தப்பட்டு வெளி நாட்டில் இருப்பவர்.) பொது உடமைக் கொள்கையை ஒப்புக் கொள்ளுகின்றவர்கள். இவ்விருவருடைய பொது உடமைக் கொள்கைக்கும் உள்ள வித்தியாசத்தை உணர வாசகர்கள் ஆசைப்படக் கூடும். அவ்வளவு விபரமாய் விளக்கமக் குந்தெரியாது. ஆனாலும் தெரிந்தவரை சிறிது விளக்குவோம். என்ன வித்தியாசமென்றால் இப்போது ரஷியாவில் நடைபெறும் ஸ்டாலினின் பொது உடமைக் கொள்கையானது ரஷியாதேசத்திற்குமாத்திரம் பொருத்த பொது உடமை என்றும் அதில் தேசிய வாடை வீசுகிறதென்றும் ட்ராட்ஸ்கியால் குற்றம் சொல்லப்படுகின்றது. ட்ராட்ஸ்கியின் பொதுவுடமைக் கொள்கையானது உலகம் முழுவதும் பொது உடமைக் கொள்கை ஏக காலத்தில் ஆக வேண்டும் என்றும், இதில் ரஷியாவென்றும், ஜர்மனி என்றும், இந்தியா என்றும் தேசிய உணர்ச்சியே இல்லாமல் எங்கும் பொதுவான புரட்சி நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டது என்று சொல்லப் படுகின்றது. இதை ஸ்டாலின் கட்சியார் குற்றம் சொல்லுகின்றார்கள். காரணம் என்னவென்றால் ஒவ்வொரு தேசமாகத்தான் பொது உடைமை ஆட்சியாக ஆக்கப்படக் கூடுமென்றும், அப்படிக்கில்லாவிட்டால் உலக முழுவதும் முதலாளி தொழிலாளி, புரட்சி ஒரே சமயத்தில் ஒன்றாய் சாதிக்க முடியாதென்றும், தோல்வி ஏற்பட்டால் எல்லா தேசத்தையும் அந்த தோல்வி பாதிக்குமென்றும், அந்தந்த தேச மக்களுக்கு அந்தந்த தேசத்திய புரட்சியை விட்டு விடவேண்டும் எனவும் சொல்லுவதாகச் சொல்லுகின்றார்கள்.

இதற்கு ட்ராட்ஸ்கி சொல்லும் பதில் என்னவென்றால் உலகப் பரப்பில் ஒரு தேசம் மாத்திரம் பொது உடைமை ஆகி விட்டால் மற்ற தேச முதலாளிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து எதிர்த்துப்போர் தொடங்கி அதைக் கெடுத்து விடுவார்கள் என்றும் தனித்தேசத்திய பொது உடைமை என்றைக்கு இருந்தாலும் ஆற்றோரத்திய வீடு போல் ஒரு நாளைக்கு வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப் பட்டு விடும் என்றும் சொல்லுவதாகச் சொல்லுகிறார்கள்.

இந்தப்படி இன்னும் அனேக வித ஆட்சேபணை சமாதானங்கள் உண்டு. இந்த இரண்டு கட்சியும் ஐரோப்பிய தேச முழுவதிலுமுள்ள முக்கிய நாடுகளிலெல்லாம் இருந்துவருகின்றது. இருகட்சிக்கும் புஸ்தகங்கள் தொண்டு பிரசாரங்கள் உண்டு. ஆனால் ஸ்பெயினில் ஸ்ட்ராட்ஸ்கி கட்சியே பலம் பெற்று இருப்பதாய் தெரிய வருகிறது.

நிற்க ஸ்பெயினில் தற்சமயம் இருந்து வரும் குடி அரசுக்கு சற்று பலம் குறைவு என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் அங்கு தற்சமயம் உள்ள குடிஅரசானது முன்குறிப்பிட்டதுபோல் ஒருவகை முதலாளி குடிஅரசு ஆகத்தான் இருக்கிறது ஆதலால் இதற்கு சிண்டிகலிஸ்ட் கட்சியாரும் இரண்டு வகை கம்யூனிஸ்ட் கட்சியாரும் பொது தொழிலாளிகளும் விரோதிகளாகவே இருக்கிறார்கள். குடி அரசு கவர்ன்மெண்டானது நாஸ்திக கொள்கையாய் இருப்பதால்பாதிரிகளும் ஆஸ்திக முதலாளிமாரில் சிலரும் மற்றும் பழய ராஜாவுக்கு சேர்ந்தவர்களும் விரோதிகளாய் இருக்கிறார்கள். ஆனால் இந்த குடி அரசு சர்க்காருக்கு இப்போது உதவியாய் இருப்பவர்கள் எல்லாம் நமது நாட்டு (இந்திய) காங்கிரசுக்கு உதவி இருப்பது போல் சில முதலாளிகளும் (உத்தியோகத்தை எதிர் பார்த்த) படித்த கூட்டத்தாரும் அவர்களது கூலிகளான சில தேசிய வாதிகள் என்று சொல்லிக் கொள்ளப்படுபவர்களுமே ஆவார்கள். இவர்களுக்கு மேல்கண்டதொழிலாளர் கூட்டத்தாரிடையும் பொதுஉடமை கூட்டத்தாரிடையும், தன்னரசு கூட்டத்தாரிடையும் மதிப்பு கிடையாது. இந்த மூன்று கூட்டத்தாரும் எக்காரணம் பற்றியாவது ஒன்று சேர்ந்தால் அந்த நிமிஷமே ஸ்பெயின் முழுவதுமே ஒரு விநாடியில் பொது உடமை நாடு ஆகி விடும் என்பதில் சந்தேகமில்லை. இன்றைய ஸ்பெயின் குடி அரசை நிர்வாக விஷயத்தில் அதிகமாக குற்றம் சொல்லி எதிர் பிரசாரம் செய்பவர்களும், தொண்டு பிரசுரம் வழங்குபவர்களும் பெரிதும் பாதிரிக் கூட்டங்களே ஆவார்கள். ஆதலால் ஸ்பெயின் குடி அரசானது சிற்சில விஷயங்களிலாவது பாதிரிகளுக்கு நல்ல பிள்ளையாய் நடக்க வேண்டி இருக்கின்றது. அது போலவே பொது உடைமைக்காரரின் தயவை பெற சில விஷயங்களில் அவர்களுக்கு அநுகூலமாகவும் நடக்க வேண்டி இருக்கின்றது ஆகவே ஸ்பெயின் குடி அரசின் கொள்கைக்கு ஏதாவதொரு உதாரணம் காட்ட வேண்டுமானால் நமது சென்னை அரசாங்க மந்திரி சபையையே தற்சொரூபமான உதாரணமாய்க் காட்டலாம்.

சென்ற 5, 6 வருஷ காலமாய் சென்னை மந்திரி சபைகளுக்கு எப்படி யாதொரு விதமான கொள்கையுமில்லாமல் எப்படியாவது உத்தியோகம் நிலைத்தால்போதும் என்கின்ற ஒரே "பலமான" கொள்கை மீது மந்திரிகள் நிர்வாகம் நடைபெற்று வந்தனவோ அது போலவே தான் ஸ்பெயின் குடி அரசு அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட கொள்கை இல்லாமல் நடந்து வருகின்றது. மக்களுக்கு உண்மை உணர்வு வந்து விட்டால் இம்மாதிரி கொள்கையற்ற ஆட்சி ஒழிந்து தான் தீரும். ஆதலால் தான் இன்று ஸ்பெயின் தேசத்தில் ஏற்பட்ட சில மக்களின் உண்மை உணர்வானது இன்று அந்த தேசத்தில் இரண்டொரு நகரங்களில் பொது உடமை ஆட்சி நிருவப்பட்டு விட்டதாக தினசரிகளில் காணப்படுகின்றது. (இதன் முடிவு எப்படி இருந்தாலும்) என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்கு, ஏன், வெகு சீக்கிரத்தில் ஸ்பெயின்தேச முழுவதுமே பொது உடமைதேசமாக ஆகித்தான் தீரும். ஜர்மனியும் இப்போது தன்னமுதலாளிக் கட்டுகளை அவிழ்த்துக் கொண்டு வெகு சீக்கிரத்தில் பொதுஉடமை ஆட்சிக்கு ஓட்டம் பிடிக்கும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

இந்தியாவிலோ கைராட்டினமும், கோவில் பிரவேசமும் தான் தாண்டவமாடுகின்றது. இவைகள்தான் தேசியமாகவும், சுயராஜ்யமாகவும், குடி அரசாகவும், புரட்சியாகவும் பாமர மக்கள் கருதும்படி காந்தியார் மூலம் பிரசாரம் நடைபெற மில் முதலாளிகளும், கோடீஸ்வரர்களும் பண உதவி செய்து வருகிறார்கள் இதற்கே அடிபிடி சண்டையும் சனாதன தர்மம், வருணாச்சிரம தர்மம சண்டைகளும் எதிர்ப்புகளும் நடப்பதுடன் இதற்கு வேதத்தில் சாஸ்திரத்தில் ஆதாரமிருக்கின்றதா இல்லையா என்கின்ற விவகாரசபைகளும் நடந்த வண்ணமாயிருக்கின்றன.

சட்டசபை வீரர்களின் தீவிரச் செயல்களோ "பிச்சை கொடுப்பவனைத் தடுக்கக்கூடாது" என்று சொல்லத் தக்க விஷயங்களையே தீர்மானங்களாக கொண்டு போவதாய் இருக்கின்றன.

அதாவது யாராவது, எவரையாவது கோவிலுக்குப் போக அனுமதி கொடுத்தால் அதை சர்க்கார் தடுக்கப்படாது என்பதாகும்.

இதற்கே பொது மக்களை இரு கூட்டமாய் கிளப்பி விட்டு இந்த சட்டத்திற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று ஒரு கூட்டமும், அனுமதி கொடுக்கக்கூடாதென்று ஒரு கூட்டமும், கர்தடைபடும்படி கூப்பாடு போடச்செய்யப்பட்டு வருகிறது. இரண்டுக்கும் தேசிய வாதிகளும் சுயராஜ்யவாதிகளுமே காரணமாகும் (தப்பித்தவரி வைசிராய் பிரபு இந்த தீர்மானம் சட்டசபைக்கு வருவதற்கு உத்திரவு கொடுக்க மறுத்து விட்டால் அந்தச்சாக்கிலேயே யெல்லா பொருப்புகளையும் சர்க்கார் தலையில் போட்டுவிட்டு தாங்கள் பெரிய தீண்டாமை விலக்கு வீரர்களாய் விளங்கிவிடலாம் என்கின்ற சூட்சியே இதில் விளங்குகின்றது) மற்ற சோம்பேரிகள் விளம்பரக்காரர்கள் இதில் எதிலாவது ஒன்றில் சேர்ந்து தங்கள் பெயர் விளம்பரமானால் போதும் என்று கருதிக்கொண்டிருப்பதே பெரிய தேச சேவையாய் இருந்து வருகின்றது. எப்படியானாலும் இதன் கடைசிமுடிவானது பணக்காரனும், படித்த சோம்பேரிக்கூட்டமான உத்தியோகஸ்தனும், இவர்களுக்கு நடுத்தூண்களாயிருக்கும் மதமும், கோவிலும், சாஸ்திரங்களும் என்றும் சிரஞ்சீவியாய் இருக்கப்போகிறது, "தேச பக்தர்கள், தேசிய வாதிகள்" முதலியவர்கள்கதி, 'வெருங்நாய் சந்தைக்குப்போய் வெள்ளிக்கோலில் அடிபட்டது' என்பது போல் நாலைக்கு ஏதாவது இந்தப் பணக்காரனையும், உத்தியோகஸ்தனையும் திட்டி காலம் கடத்துவதற்கு ஏதாவது ஒரு இயக்கமோ வழியோ கிடைக்காதா என்று தேடவேண்டியதைத் தவிர வேறு ஒரு வேலையும் கிடைக்கப் போவதில்லை. இத்தனை சந்தடியில் 'கல்யாண சந்தடியில் தாலிகட்ட மறந்தது' போல் பிரிட்டிஷ் முதலாளிகள் சங்கதி மறந்து போய் அவர்கள் என்றும்பதினாறாகவாழப்போகின்றார்கள் என்பதில் யாருங்கடுகளவு சந்தேகமும் படவேண்டியதில்லை.

---

## வருந்துகிறோம்.

### ராவ்பகதூர் அப்பாசாமி முதலியார் மரணம்.

9—1—33 இரவு செங்கற்பட்டு பிரபல வியாபாரியும், ஜமீன்தாரும், நிலச்சுவான்தாருமான தோழர் ராவ்பகதூர் அப்பாசாமி முதலியார் அவர்கள் சென்னையில் உயிர் துறந்தார் என்ற சேதியைக்கேட்டு மிக வருந்துகிறோம். இவர் செங்கற்பட்டில் நடந்த முதலாவது சுயமரியாதை மகாநாட்டிற்கு மூல புருஷராயிருந்து நடத்தினவர். சீர்திருத்தத்துறையில் வெகு தூரம் முற்போக்குடையவர். ஏழைகளிடத்தில் மிகுதியும் அன்பும் இரக்கமும் உடையவர். இவர் இறந்தது அந்தஜில்லாவாசிகளுக்கு ஒரு பெருங்குறைவேயாகும்.

---

## காந்தியின்கருத்து! ஈடேறுமா?

......மதம், பணம், பசி ஆசியவை உலகில் இருக்கும் வரையில் துவேஷமும் இருக்குமாகையால், ஒருகாலத்திலும் சண்டைகள் நிற்கப்போவதில்லை. புத்தர், கிறிஸ்து போன்ற அன்பேவடிவானவர்கள் உபதேசித்தவைகள் எப்படிவீணாயிற்றோ, அதுபோலவே மகாத்மாகாந்தியின்கருத்துக்களும் ஈடேறுமென்பதை சென்றவாரத்திலும், புது வருஷப் பரிசிலனையில் குறிப்பிட்டிருக்கிறோம். வெறும் தத்துவம்பேசி, பேசிய பேச்சுகளுக்கு பத்துவிதப் பாஷியங்கள் எழுதித் திரியும் பிராமணர்கள் உள்ள இந்தியாவில், பர்னாட்ஷாவின் உண்மைகள் (சமதர்மக் கொள்கைகள் ப-ர்) மக்களுக்குப் புலனாவது கஷ்டமெனினும் அவருடைய நூல்களை இந்திய வாலிபர்கள் வாசிக்கவேண்டுமென்று இச்சமயம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"தமிழ் நாடு"

---

## வெகு அருமையானது.

பேராசிரியர் தோழர் ஜார்ஜ் பர்னாட்ஷாவின் அமெரிக்க சொற்பொழிவு அடுத்த வாரம் வெளிவரும். ப-ர்.

---



சுயமரியாதை இயக்கத் தோழர்

முத்துசாமி வல்லத்தரசு B. A., B. L., M. L. C.,

புதுக்கோட்டை புரட்சிக்குக் காரணஸ்தராயிருந்ததாக எண்ணப்பட்டு தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டவர். இப்பொழுது புதுக்கோட்டை சர்க்கார் இவர் நிரபராதி என்று கண்டு தேசப்பிரஷ்ட உத்திரவை ரத்து செய்து விட்டனர்.

---

## கோவை சி. எஸ். ஆர்.

திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியாரவர்கள் சென்னை பப்ளிக் வர்க்ஸ் எஸ்டாப்ளிஷ்மெண்டு கமிட்டிக்கு ஒரு அங்கத்தினராய் சென்னை கவர்னரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்த வேலை இதற்கு முன் பொப்பிளி ராஜா அவர்கள் பார்த்து வந்ததாகும்.

---

## கோவைத் தோழர் பொன்னையா வெற்றி.

கோவை ஜில்லாபோர்டு வைஸ்பிரசிடெண்டும், பிரபலவியாபாரியுமான தோழர் எஸ். என். பொன்னையா அவர்கள் கோயமுத்தூர் ஜில்லாபோர்டுக்கு கோபி சர்க்கிள் மெம்பராக பெருமித மெஜாரிட்டியால் தெரிந்தெடுக்கப்பட்டார். அதாவது தோழர் பொன்னையாவுக்கு 1100 ஓட்டுகளும், மற்றொரு அபேட்சகரான தோழர் அய்யம்பாளையம் ராஜாக்கவுண்டருக்கு 290 ஓட்டுகளும் கிடைத்தது.

---

## பிராஞ்சு-ருஷியநட்பு ஒப்பந்தம்.

பிரஞ்சு-ருஷியா சமரச ஒப்பந்தத்தில் சில நாட்களுக்கு முன் இரு சர்க்கார் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டார்கள். பிரஞ்சு சர்க்கார் சாரபில் பிரஞ்சு பிரதம மந்திரியும், ருஷியா சர்க்கார் சார்பில் பிரான்சிலுள்ள ருஷியா ஸ்தானாதிபதியும் அதிற் கையெழுத்திட்டனர். அந்த ஒப்பந்தத்தின் சாராம்சமாவது: யுத்தம் ஏற்படும் பட்சத்தில் இருநாடுகளும் பரஸ்பரம் நடுநிலைமை வகிக்கவேண்டும். பிரஞ்சு சர்க்காரோ அல்லது ருஷிய சர்க்காரோ ஒருவர்மீது மற்றொருவர் யுத்தந் தொடரக்கூடாது. பிரஞ்சு சர்க்கார் ருஷிய சர்க்காருக்கு விரோதமாகவோ அல்லது ருஷிய சர்க்கார் பிரஞ்சு சர்க்காருக்கு விரோதமாகவோ வேறு தேசங்களுடன் வர்த்தகம், பொருளாதாரம் முதலிய எவ்விஷயங்களை யொட்டியும், ஒப்பந்தஞ் செய்துகொள்ளக்கூடாது. இரு நாடுகளுக்கும் சம்பந்த முள்ள விஷயங்களை யொட்டி அந்நாடுகளுக்கு ஆலோசனை கூறச் சாஸ்வதமான கமிஷனொன்றை நியமிக்கவேண்டும்.

---

## புதுவையில் சுயமரியாதைப் பிரசங்கம்.

புதுவையில் தோழர் அ. பொன்னம்பலனார் முதலியவர்கள் பேசிய சொற்பொழிவுகள் அடுத்தவாரம் வெளி வரும்.

## ஆத்திக நாத்திகம்.

—:0:—

### நாஸ்த்திகத்தைக்கண்டு நடுங்கும் போப்புடைய சுற்றுத்திரவும்—அதற்கு நாத்திகர்களின் பதிலும்

அமெரிக்காவில் 11-வது பியஸ் போப்பு அவர்கள் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் ஒருசுற்றுத்திரவு அனுப்பி இருக்கிறார். அதாவது,

"உலகம் முழுவதும் மேலும் மேலும் பெருகி வரும் நாஸ்திகம் அழிய வேண்டுமென்று நாளது வருஷம் ஜூன் மாதம் 3-வது வாரம் முழுவதும் கர்த்தரை பிரார்த்தனை செய்யுங்கள்.

சரித்திரத்தில் இதுவரை நடந்து வந்திராத மாதிரியில் இப்போது நாஸ்திகப் பிரசாரம் நடந்து வருகின்றது. எக்காலத்திலும் நாஸ்திகர்கள் இருந்து வந்திருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் எங்கோ ஒன்று இரண்டு பேர்கள்தான் காணப்படுவார்கள். ஆனால் இப்போது எங்கு பார்த்தாலும் நாஸ்த்திக உணர்ச்சியே தாண்டவமாடுகின்றதுடன் "மதமென்பது அடியோடு அழிக்கப்பட்டாலொழிய, உலக மக்களுக்கு சமாதானமும், முன்னேற்றமும், நன்மையும் எற்படாது'!

என்பதாக எங்கும் பறையடிக்கப்படுகிறது.

ஆகையால் ஏழைகளாகவும் வேலை இல்லாமல் திண்டாடி பட்டினிகிடப்பவர்களாகவும் சிருஷ்டிக்கப்பட்ட மக்கள், கருணாநிதியும் அன்புருவமுமான கர்த்தரின் கட்டளைகளுக்கு அடங்கி நடந்து பொருமையுடன் இருக்காமல் இந்த நாத்திகக் கிளர்ச்சியில் சேர்ந்து தங்களது நிலைமை இன்னமும் மோசமாகச் செய்து கொள்ளாமல் இருக்கும்படியும், தங்களுடைய கஷ்டாகஷ்டங்களை நம்பிக்கையுடனும், பொருமையுடனும் கர்த்தரிடம் பிரார்த்தித்துக் கொள்வார்களாக" என்று சுற்றிக்கைவிடுத்திருக்கிறார்.

இதற்கு பதிலாக அமரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார், போப் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி விளம்பரப்படுத்தி இருக்கிறார்கள் அது என்னவென்றால்:—

ஐயா போப் அவர்களே!

தாங்கள் அனுப்பிய மேற்படி சுற்றறிக்கையானது நாத்திகத்தையோ, அல்லது அது அதிவேகமாய்ப் பரப்புவதையோ எவ்விதத்திலும் தடைப்படுத்த முடியாததாகவே காணப்படுகிறது. சகல பொருள்களும் அளவுக்கு மீறி ஏராளமாய் உற்பத்தியாகிக்கிடக்கும் இவ்வுலகில் வேலை இல்லாமலும், ஆகாரத்திற்கே வழியில்லாமலும் திண்டாடும் ஏழைமக்களை நோக்கி "கடவுளாலேயே உங்களுக்கு எற்பட்டிருக்கும் தரித்திரத்தையும், மனித சமூகத்தின் போராட்டங்களால் எற்பட்டுள்ள கஷ்டங்களையும்" வணக்கத்தோடும், நம்பிக்கையோடும் எற்றுக்கொண்டு பொருமையாய் இருந்து திருப்தி அடையுங்கள்"

என்று கேலிக்கூத்தாகப்பேசும் உங்களுடைய மனப்பான்மை எப்படிப்பட்டது என்பது எங்களுக்கு விளங்கவில்லை.

தரித்திரம் என்கின்ற சாபம் யாரால் எற்பட்டதாய் இருந்தாலும், அது இனிமேல் கண்டிப்பாய் நாஸ்த்திகர்களால்தான் அழிக்கப்பட்டு இனி என்றும் தலைகாட்டாதபடி ஒழியப்போகின்றது என்பதை உறுதியாய் மனதில் வையுங்கள் ' தரித்திரம் ஒழிய பொருமையுடன் கடவுளை பிரார்த்தியுங்கள்" என்பது உங்களது பரிசுத்தமான எமாற்றும் தன்மையைவிளக்குவதாய் இருக்கிறது.

மனித சமூகம் நன்மையடைய வேண்டுமானல் பொருளாதாரக் கொள்கையை சீர்திருத்தம் செய்ய வேண்டுமே ஒழிய பிரார்த்தனைப் புரட்டினால் முடியவே முடியாது.

உங்களுடைய சுற்றறிக்கைகள் எங்களுடைய முயற்சிக்கு சிறிதாவது மாறாய் இருக்குமானல் நாங்கள் இன்னும் தீவிரமாக எல்லா மதங்களையும், எதிர்த்துப் பிரசாரம் செய்யவேண்டிவரும் என்பதோடு, முக்கியமாய் இப்போது எல்லா மதங்களுக்கும் முதுகெலும்பாய் இருந்து வரும் கத்தோலிக்க மதத்தையே அழிக்கும் வேலையை முதல்வேலையாயக்கொள்ளுவோம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மதம் என்றால் மனிதர் நடுங்கும் காலமாகிய உங்களது காலம் மலையேறி வெகுகாலமாய்விட்டது. இப்போது நாஸ்திகத்தை அழிக்க முயற்சிப்பது அடியற்ற ஓட்டைக் குடத்தில் தண்ணீர் சேர்ப்பதாகும். ஏனெனில் நாஸ்திகத்தை அழிக்க வேண்டிய காலம் மிஞ்சிப்போய்விட்டது. நீங்கள் வெகுகாலம் விட்டுவிட்டு இப்போது அதுபற்றி எழியும் காலத்தில் வந்திருக்கிறீர்கள். இனி அணைக்க நினைப்பது முடியாத காரியம். மிஞ்சிப்போய்விட்டது என்பதை உணருங்கள்.

நாஸ்திகத்தை தடுப்பதென்பது கல்லில் முட்டிக்கொள்வதாகும்.

மதம் மாண்டுவிட்டது. (Riligion is doomed) இனி வரும் காலம் எங்களுக்கு (நாஸ்த்திகத்துக்கு) சசொந்தமானது.

இங்கனம் தங்களது நம்பிக்கையுள்ள,

சார்லஸ் ஸ்மித் தலைவர்,

அமரிக்க நாஸ்த்திக அபிவிருத்தி சங்கத்தார்

### மற்றொரு போப்.

உலகத்தில் தற்காலம் எற்பட்டிருக்கும் சமூகப் பொருளாதாரக் குழப்பத்தைக்கண்டு வருந்தமடைந்தஒரு பாப்பரசாஒரு ஸ்ரீமுகம் வெளியிட்டிருக்கிறார். அதன் சாராம்சமாவது:—

பொதுவுடைமை, தனிப்பட்டவர் சுயாலம்மிகைப்படுத்தப்படும், தேசிய உணர்ச்சி ஆகியவை ஒழியவேண்டும்' மனித வர்க்கத்தையே இப்போது நசுக்கி வரும் கெடுதல்களை உண்மை கிறிஸ்துவமத நம்பிக்கையுள்ளவர்கள் தங்கள் முழுமுயற்சியுடன் ஒழிக்க முற்படவேண்டும். உலகச்செல்வத்தையெல்லாம் ஒரு சில தனவந்தர்கள் பெறவியாபாரம் செய்வதால் உலகில் வெகுதூரம் கஷ்டம் உண்டு பண்ணி அவர்களும் முடிவில் சீர்கேடு அடைவதுடன்பெரும்பான்மையான மக்களின் கதியையும் கொடுத்துவிடுகின்றனர்" என்பதாம்.

உலகத்தின் பொருளாதாரக்கஷ்டத்தைப்போக்க போப்பரசர் என்பவர் பொதுவுடைமைக் கொள்கையை மறுப்பினும் சமதர்மக் கொள்கையை (சோஷியலிசத்தை) ஒப்புகொள்வதை கத்தோலிக்ககிறிஸ்தவர்கள் சிறிது ஆராய்ந்து பார்ப்பார்களாக. (ப—ர்)

### மற்றொரு பாதிரியார்.

சிறிது நாட்களுக்கு முன் ஈரோடு வாலிபர் சங்கவிழா ஈரோடு போர்டு ஹைஸ்கூலில் ரெவரண்ட்பிரப்துரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது அது சமயம் அவர் பேசியதின் சுருக்கம் வருமாறு.

நான் சோஷியலிசத்தை ஆதரிக்கிறேன். ஏனெனில் ஏழை மக்களின் ரத்தத்தை முதலாளிகள் உறிஞ்சி பணம் சம்பாதிப்பதாலேயேயாகும். முதலாளிகள் கொள்ளையைத் தடுப்பது இப்போது அவசியமாகும். என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனல் நான் பொதுவுடைமைக்காரனல்ல கடவுளிடம் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு என்று பேசினர்.

---

## நேற்றும், இன்றும்.

(சுமைதாங்கி.)

ஓ தேசியவாதிகளே! தேசியப் பத்திராதிபர்களே!!

சுயமரியாதைப் பிரசாரங்கள் நடக்கின்ற பக்கங்களில் கலகங்கள் நடப்பதாகவும், அடிதடிகள் நடப்பதாகவும் கற்பனைகள் செய்தும் இழிபிறப்புரிபோர்ட்டர்களின் நிருபங்களை நம்பியும்நடவாத சங்கதிகளை பத்திரிகைகளில் போட்டு "நேற்று" மகிழ்ந்தீர்கள்.

சுயமரியாதை இயக்கம் செத்தது என்று பூனைகண்ணை மூடிக்கொண்டுபால் குடித்தால் உலகத்தார் கண்களும் மூடப்பட்டிருக்கும் என்று கருதிய திருட்டுப்பூனைகள் போல் நடித்தீர்கள், முடிவில் என்ன நடந்தது? என்று பார்த்திருப்பீர்கள்.

அதாவதுஉங்கள் வயிர்வளர்ப்புக்கு ஆதாரமாயிருக்கும் காங்கிரசின் யோக்கியதை—ஹரிஜன சேவையின் யோக்கியதை 'இன்று" எப்படி இருக்கின்றது? எத்த பக்கம் கலகம்? எத்தனை பக்கம் தடியடி? எத்தனை பக்கம் கல்லடி? எத்தனை பக்கம் ரத்தக்காயம்? எத்தனை பக்கம் மண்டை உடை? எத்தனை பக்கம் விரட்டி அடிக்கல்? எத்தனை பக்கம் காங்கிரஸ்காரரே கூட்டத்தை கலைத்துக்கொண்டு வாலை இடுக்கிக்கொண்டு ஓட்டம் பிடிக்கல்? எத்தனை பக்கம் புரட்டு இவைகள் தேசியப்பத்திரிகைகளிலிலேயே சொந்த நிரூபர்கள் பேரால் காணப்படுகின்றதே, இது பொய்யா? இதைச் செய்தவர்கள் எல்லாம் புத்திசாலிகளா? அல்லது மடையர்களா? மேன்மக்களா? அல்லது கீழ்மக்களா? தேசியவாதிகளா? தேசத்துரோகிகளா? அல்லது இதைச்செய்தவர்கள் எல்லாம் வீரர்களா? அல்லது காங்கிரஸ் காரர்களுக்குப்புத்திகற்பித்தவர்களா? யோசித்துப்பாருங்கள்' தட்டிப்பேச ஆளில்லாத காரணத்தால்தானே சண்டப்பிரசண்டர்களாய் விளங்குகிறீர்கள்? "அனந்த வள்ளம் அட்டாலியில் இருக்கும்" என்பதை அறியாமல் தானே போக்கிரித்தனமாய் எல்லாம் எழுதிவிட்டீர்கள்.

மற்றும் செருப்படி ஜோட்டடி என்றெல்லாம்.................. தனமாய் எழுதிமகிழ்ந்தீர்களே! இப்பொழுது உங்களுக்கு உங்கள் சங்கதிகள் பட்டதெல்லாம் போதும் என்று ஆய்விட்டதே!! இனியாவது புத்தியாய், யோக்கியமாய் பிழையுங்கள் என்று ஞாபக மூட்டவே இதை எழுதினேன். ஆத்திரப்படுவதில் பயனில்லை. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும் என்பது உண்மை அனுபவமாய் விடவில்லையா? மற்றும் தோழர் காந்திக்கு கொடும்பாவி சட்டி திருப்பூரில் இழுக்கப்படவில்லையா? தோழர் காந்திக்கு கருப்பு புஷ்பம் கராச்சியில் கொடுக்கவில்லையா? தோழர் காந்திக்கு கருப்புக் கொடி பம்பாயில் பிடிக்கவில்லையா? தோழர் காந்தி மீட்டிங்குகளில் தமிழ் நாட்டில் குழப்பம் நடக்கவில்லையா? காந்தி ஒழிய! காந்தீயம்ஒழிய!! காங்கிரசு ஒழிய!!! என்றுகராச்சியில்ஆயிரக்கணக்கான பேர் கூப்பாடு போடவில்லையா? "கடவுள் சித்தமில்லாமல் காந்தியும், காங்கிரசும் ஒழியாது" என்று தோழர் காந்தி உலகத்தாருக்கு தைரியம் சொல்லவில்லையா? சுயமரியாதைக்கூட்டத்தில் காலித்தனம் செய்தது காங்கிரஸ்காரர்கள் என்பதை காங்கிரஸ் காரர்களே மறுக்கமுடியாது. ஆனல் காங்கிரஸ் கூட்டத்தில்"காலித்தனங்கள்" செய்யமேல் கண்டநடவடிக்கைகளில் ஒரு சிறிதும் சுயமரியாதைக்காரர்களால் நடத்தப்பட்டது அல்ல என்பதை நீங்களே ஒப்புக்கொள்ளுவீர்கள்.

ஆகவே,ஜனங்களுக்கு காலித்தனங்கள் செய்ய இன்று உபாத்தியாயர்களாய் இருப்பது எந்த இயக்கத்தைச்சேர்ந்தவர்கள், யாருடைய சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிபவர்கள் என்பதை இப்போதாவது உலகம் உணரட்டும்.

## காந்தியாருக்கு பர்னாட்ஷா புத்திமதி.

லண்டனில் இருந்து உலக சுற்றுப்பிரயாணமாகப் புறப்பட்டபோது உடைமைக் கொள்கையாரான தோழர் பர்னாட்ஷா அவர்கள் பம்பாயிக்கு வந்திருக்கிறார். அவரை இந்திய பத்திரிகை நிருபர்கள் பேட்டிகண்டு பேசியகாலத்தில் "காந்தியாரைப்பற்றி உங்களுடைய அபிப்பிராயமென்ன? வென்று கேட்ட கேள்விக்குப் பதிலளித்ததாவது:—

அவர் அலுப்படைந்துவிட்டதால் உண்ணுவிரதமிருந்து தற்கொலைபுரிந்துகொள்ளுவதாக மிரட்டுகிறார்! நான் அவரைச் சந்தித்தால் அதை விட்டுவிடும்படி அவருக்குக் கூறுவேன்" மேலும் "தன்னை உணர்ந்து கொள்ள உலகம் தன்னைப்போல் இல்லை என்பதை உணர்ந்துகொள்ள காந்திக்கு வெகுகாலம் ஆகிறது." என்று சொல்லியிருக்கிறார்.

## தாராபுரம் தாலூகா போர்டு.

புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட தாராபுரம் தாலூகாபோர்டுக்கு அதன் முதல் தலைவராக சங்கரண்டாம்பாளையம் பட்டக்காரர் தோழர் வி. எஸ். வேணுடையாக் கவுண்டர் அவர்கள் ஏகமனதாய்த் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தோழர் சின்னக்காம்பட்டி எஸ். கே. முத்துச்சாமிக் கவுண்டர் பி. ஏ., பி. எல். அவர்கள் உபதலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

## ஈப்போவில் சுயமரியாதை மணங்கள்.

I.

24-11-32-ந்தேதி ஈப்போவில் பஞ்சாங் எஸ்டேட்டில் தோழர் சுப்பி குமாரர் தோழர் நவிசுக்கும், தண்ணீர்மலை குமார்த்தி தண்ணீர் மலைக்கும் சுயமரியாதைத்திருமணம் நடந்தது. தோழர்கள் ஐயாரு, அனுக்கிரகம் பெருமாள் முதலியவர்கள் பேசினார்கள்.

II.

10-12-32ல் லகாட்ஜெட் 59-வது நெம்பர் மாளிகையில் தோழர் முத்து கருப்பத்தேவர் குமாரர் நிருப்பதிக்கும், தோழர் தகுஜிணமூர்த்தி குமார்த்தி பட்டம்மாளுக்கும் சுயமரியாதைத்திருமணம் நடந்தது. இதன் விபரம் பின்னால் வரும்.

## இராமநாதபுரம் ஜில்லாபோர்டு தலைவர்தேர்தல்

இராமநாதபுரம் ஜில்லா போர்டிற்குத் தலைவராக தோழர் இராமநாதபுரம் ராஜா அவர்களே மீண்டும் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டார்.

ஒரு நிருபர்

# திருமண அழைப்பு.

நாளிது 22-1-33 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருச்சி தெப்பக்குளம் முனிசிபல் சத்திரத்தில், திருச்சிராப்பள்ளி வரகனேரி தோழர் பி. பிச்சை அவர்கள் குமாரர் தோழர் அபிமன்னன் அவர்கட்கும், சுத்தமல்லி கிராமம் தோழர் ரெங்கசாமி அவர்கள் குமாரத்தி நாகம்மாள் அவர்கட்கும் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடைபெறும். அதுசமயம் தோழர்களுடன் வரவேண்டுகிறோம். அப்பொழுது பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

தங்கள்,

ச. ம. சி. பரமசிவம்,
S. ஆரோக்கியசாமி,
காரியதரிசிகள்.

T. V. சோமசுந்தரம் B. A. B. L.
தலைவர்
தமிழ் நாட்டுப்புரோகித
மறுப்புச் சங்கம், உறையூர் திருச்சி

# கும்மி.

:0:

(ப. ஜீவானந்தம் தொகுத்தது)

1. பச்சைக்குழந்தைக்குப் பாலுமில்லை—அதன்
பட்டினியழுகை கேட்டதில்லை
இச்சையுடன் பாலைச்சாமிக்கென்றே கல்லில்
இட்டு வணங்குகிறார் முத்திக்கென்றே.

2. ஏழை யெளியவர் ஆடையின்றிக் கந்தை
ஏற்றுடுத்தி மனம் ஏங்குகின்றார்
பாழான கல்லுக்குப் பட்டாடைகட்டிடும்
பத்தரெல்லாம் வெறும் பித்தான்றோ.

3. கூழுக்கழு மக்கள் கோடியுண்டு-நித்தம்
கும்பியெரிபவர் கோடியுண்டு
பாழுக்கழுகின்றார் சாமிக்கென்று கல்மூன்
பாற்சோறு பொங்கல் படைத்துமேதான்.

3. எண்ணையற்றுத்தலை யீர்க்குஞ்செடிபோன்றோர்
எத்தனை கோடி இத்தேசத்திலே
கண்ணை மூடிக்கொண்டு எண்ணை குடங்குடம்
கல்மேலே கொட்டும் கருத்தென்னவோ?

5. குள்ளக்குடிசைக்கும் குட்டிச்சுவருக்கும்
கொஞ்சமல்ல மக்கள் கெஞ்சுகின்றார்
உள்ள பொருள் எல்லாம் கல்லுத்தெய்வம்வாழ
வூட்டுகின்றார் கோவில் நாட்டுகின்றார்.

6. கஞ்சிக்குக்காணி நிலமுமில்லை-கையில்
காசில்லை யென்பாருக் கெல்லையில்லை
விஞ்சு கற்சாமி பிழைத்திடவே கோடி
வேலி நிலமுண்டு விந்தையன்றோ?

7. சாமிக்களித்த வித்தேசத்து நன்மக்கள்
சாகின்றார் பஞ்சத்தும் நோய்களிலும்
சேமித்து நாம் நம்மைக்காத்திடுவோம் என்றும்
சீவானந்தம் பெற வாழ்ந்திடுவோம்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கும் சிறிதும் லட்சியம் செய்யமாட்டேன் என்கிறீர்களே! ஒரு கெஜம் சீமைத்துணிக்கு 4-அணு கொடுப்பது உங்கள் தேசப்பணம் கொள்ளை போகின்றது என்கிறீர்கள். ஒரு சிம்டா சாம்பலும், ஒரு உத்தரிணி அழுக்குத் தண்ணிக்கும் 100, 200, 500, 1000, 10000 ரூபாய்கள் கூட கொட்டிக்கொடுக்கின்றதற்கும் அதனால் உங்களையே நீங்கள் இழிவு படுத்திக்கொள்வதற்கும் வெட்கமில்லாமல் ஜாதிய அபிமானமில்லாமல் சகித்துக்கொண்டிருக்கிறீர்களே! இதன் இரகசியம் என்ன? மானத்தை விட தேசியம் தானே பெரிதென்று உங்களுக்குகற்பிக்கப்படுகின்றது.

ஓ தேசியப் பத்திராதிபர்களே உங்கள் போக்கிபதையை நினைத்தால் பரிதாபப்படுவதா அல்லது ஆத்திரம் கொள்ளுவதா? உங்களை என்ன தான் செய்வது என விளங்கவில்லையே. பாமர மக்களின் முட்டாள் தனத்தை உபயோகித்துக் கொண்டு இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இந்த அக்கிரமத் தனத்தைச செய்து கொண்டு வாழ நினைத்திருக்கிறீர்கள்? நீங்கள் உண்மையான தேசிய உணர்ச்சிக்காரர்களாய் இருந்தால் உங்களுக்கு வயிற்றுப் பிழைப்புக்கு இதை விட வேறு மார்க்கம் கிடைத்திருக்காதா?

கொள்ளை-கொள்ளை--ஐரோப்பியர் கொள்ளை—பிரிட்டிஷார் கொள்ளை என்று கூத்தாடுகின்றீர்களே! கொட்டை கொட்டை எழுத்தில் குடி முழுகிப் போய் விட்டது போல் போட்டு கூப்பாடு போடுகின்றீர்களே!! இந்த சங்கராச்சாரி கொள்ளை பணத்தை மாத்திரமல்லாமல் மானத்தையும் மக்கள் சுயமரியாதையையும் கொள்ளை கொண்டு போகின்றதே உங்களுக்கு கண்ணில்லையா? புத்தி இல்லையா? மனுஷ ஜாதி அபிமானமில்லையா? அல்லது சிறிதும் பயமில்லையா? என்று கேட்கின்றேன். ஒரு தேசிய பத்திரிகையாவது ஒரு தேசியத் தலைவராவது இந்தக்கொள்ளையைப்பற்றி ஒரு வரிகூட எழுத நடுங்குகின்றதே ஒரு வார்த்தையாவது பேச நடுங்குகின்றதே சங்கராச்சாரி உபன்யாசத்தையும், அவர் ஒன்றுக்கு இரண்டுக்கு போன இடத்தையும், பத்திபத்தியாய் எழுதுகின்றனவே இந்த தேசிய பத்திரிகைகளா மனிதனுக்கு விடுதலையையும் மானத்தையும் தேடிக் கொடுக்கப் போகின்றது? ஐயோ தேசியத்தின் பேரால் வயிற்றுப்பிழைப்பை நடத்தும் வியாபாரமல்லவா இந்த தேசிய பத்திரிகைகளுடையநடிப்பு என்பதை இப்போதாவது பொது ஜனங்கள் உணர்வார்களா? உணரத் தகுந்த புத்தி இப்போதாவது வந்ததா? கோவில் பிரவேசத்துக்காக குடி முழுகிப் போய் விட்டது போல் வேஷம் போடுகிறீர்களே. குளவிக்கல்லிடம் மனிதனைக் கூட்டி விட்டு முட்டிக் கொள்ளச் செய்கின்றீர்களே ஒழிய இந்தப்பகல்கொள்ளையை—தீவட்டிக் கொள்ளையை---மானத்தைக் கெடுத்த கொள்ளையை ஒழிக்க ஒரு பேச்சையும் காணோமே.

ஓ பொதுஜனங்களே! இந்தபோலி தேசியத்தை, மானங்கெட்டதேசியத்தை, வயிற்றுப்பிழைப்பு தேசியத்தை ஒழித்தால் தான், அழித்தால் தான் இந்திய மக்கள் மானத்துடன் சுயமரியாதையுடன் சமமான மனிதனுப் வாழமுடியும். சங்கராச்சாரி முதலிய கொள்ளையையும் விரட்டி அடிக்க முடியும் என்பதை உணருங்கள்! உணருங்கள் !! முக்காலும் உணருங்கள் !!!

## அர்ச்சகப் பார்ப்பானுக்கு அபராதம்

சேலம் டவுன், மேட்டுத்தெரு சுகவனேஸ்வரர் கோவிலில் 11.1.33 திருவாதிரை நாள் உற்சவ விக்கிரகம் வெளிசென்ற பிறகு, கோயிலை பூட்டிக் கொண்டு கோயில் அர்ச்சகர் போய் விட்டார். பிறகு சுமார் 500க்கு மேற்பட்ட மக்கள் கோயிலுக்கு போகவேண்டு மென்று அர்ச்சகனை கோயில் திறக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டார்கள். அர்ச்சகன் மறுக்கவே, கூட்டத்தில் சிலர் அர்ச்சகனை அடித்து விட்டு அவனிடமிருந்த சாவியையும்பிடுங்கிகோயிலைத்திறந்து விட்டார்களாம், பிறகு போலீசுக்கு அறிவிக்கப்பட்டு கோயில் சாவியை அர்ச்சகனிடம் இருந்து அக்கிரமமாக பிடுங்கி கோயிலை திறந்ததாக பழனிசாமி, கண்ணன், சுப்பரி ஆகிய மூவரையும் போலீஸார் கைதுசெய்து கொண்டுபோய ஜாமீனில் விடுதலை பெற்றிருக்கின்றனர். (ஒருநிருபர்)

## புதுக்கோட்டை ஸமஸ்தானம் முதலாவது தாழ்த்தப்பட்டோர் மகாநாடு.

இம்மகாநாடு புலியூரில் நடப்பதாய் பிரசுரித்திருந்ததில் எதிர்பாராத சில காரணங்களால் அட்மினிஸ்ட்ரேட்டரவர்கள உத்திரவின்படி பிரபலமான எதிர்ப்புகளினிடையே 17-12-32உ காலை 10 மணி முதல மாலை 5 மணி வரை புதுக்கோட்டை நகரமண்டபத்தில் திருச்சி தாலூகா போர்டு அங்கத்தினரும், நகரசபை கௌன்ஸிலருமான தோழர் ஆர். மருதையாவர்கள் தலைமையில் நடைபெற்றது. மகாநாட்டிற்குஉள்ளூரினின்றும் கீரனூர், அன்னவாசல், திருமயம், காரக்குடி, செட்டிநாடு, திருச்சி, தஞ்சாவூர், திருக்காட்டுப்பள்ளி, ஆலங்குடி முதலிய டேஞர்களினின்றும், குரியூர், புலியூர், மங்கனூர், மத்துத்தாக்கு முதலியபல சிற்றூர்களினின்றும் சுமார் 400 பேர்வரை விஜயஞ்செய்திருந்தனர்.

வரவேற்புத் தலைவர் மாஜி எம். எல். சி. யும், புதுக்கோட்டை மாஜி அடல்ட் போர்டு மெம்பரும், புலியூர் ஸ்கூல் போர்டு பிரசிடெண்டும், சன்மார்க்க வாசகசாலை பிரசிடெண்டுமான ஆர். எஸ். சிவம் வரவேற்புப்பிரசங்கம் நிகழ்த்திய பின் தலைவர் முன்னுரைப் பிரசங்கமும் தோழர்களான அடைக்கலசாமிப்புலவர், ச. ம. சி. பரமசிவம், விரடிப்பட்டி, எம். ஆரோக்கியசாமி, வி. சின்னையா, என். எஸ். நாராயணசாமி ஐயா, எம். பி. சாமி, கீரனூர் முகமது சுல்த்தான்முதலியோர்கள்தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், தீண்டாமை யொழித்தல் சம்பந்தமான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். பின்னர் தலைவரால் பிரேரேபிக்கப்பட்டு பல தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறியபின் தலைவர் முடிவுரையும் ஆர். எஸ். சிவத்தால் நன்றிகூறுதலும் நடைபெற்று மகாநாடு வெற்றிகரமாய் நிறைவேறியது. 17, 18உ களில் சில முக்கிய கூட்டங்களிருப்பதால் வர முடியவில்லையென்று உதகமண்டலத்தினின்று ராவ்சாஹிப். வி. ஐ. முனுசாமிபிள்ளை (எம். எல். சி.) அவர்களும், ஈ. வெ. ரா. அவர்கள் சென்னையிலிருப்பதால் வர முடியவில்லையென்றும் எழுதிய கடிதங்களும்கிடைத்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## ஈரோடு.

### தாலூகா போர்டு தலைவர் தேர்தல்.

ஈரோடு தாலூகா போர்டின் தலைவர் தேர்தல் 9-1-33 ந்தேதி ஈரோடு தாசில்தார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது-

தலைவர் ஸ்தானத்திற்கு பழைய கோட்டை பட்டக்காரர் தோழர். ராய்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்களை ஈரோடு சேர்மென் கான் சாயபு கே. ஏ. சேக்தாவுத் அவர்கள் பிரேரபிக்க தோழர் ஈங்கூர் ஈ. ஆர். கந்தசாமிக்கவுண்டர் அவர்கள் ஆமோதிக்க பெரும்பான்மை ஓட்டுகளால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோழர் ஊத்துக்குளி வி. எஸ். ராஜாக்கவுண்டர் அவர்கள் மறுபடியும் வைஸ்பிரசிடெண்டாக ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## குமாரபாளையம்.

பவானியையடுத்த குமாரபாளையம் தோழர் எம்பெருமாள் அவர்களது மனைவியார் தோழர் அலர்மேலம்மாள் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 26-12-32 காலமானார்.

தோழர் எம்பெருமாள் பழுத்த ஆஸ்திகராயும், கடவுள் பைத்தியம் கொண்டவராயும் இருந்து, 3, 4 வருடங்களாய் சுயமரியாதை இயக்கத்தில் அன்பும், அபிமானமும் கொண்டுஇது சமயம் விளங்குகிறார் என்பதும், தன் மனைவி இறந்ததையும் பொருட்படுத்தாது மறுநாள் ஈரோட்டில் நடந்த வேலைத்திட்டக் கூட்டத்திற்கு தம்இரு மக்களுடன் விஜயம் செய்திருந்தாரென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

(ஒரு நிருபர்)

## நாட்டறம்பள்ளி.

### தென்னிந்திய நலவுரிமைச்சங்கம்.

11-1-33 தேதியன்று தென்னிந்திய நலவுரிமைச்சங்கத்தின் ஆதரவில் பலிஜிவார் பொதுஜன ஊழியர் சங்க மண்டபத்தில் தோழர் ஆர். வெங்கட்டராமன் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது.

அதுசமயம் டாக்டர் சுப்பராயன் சென்னை சட்டசபையிலும், எம். சி. ராஜா, சி. எஸ். ரங்கையர் இந்திய சட்டசபையிலும் கொணடுவந்திருக்கும் ஆதி இந்து ஆலயப் பிரவேச மசோதாவை ஆதரிக்கும்படி சட்டசபை அங்கத்தினரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. அத்மசோதாவுக்கு அநுமதியளிக்கும்படி கவர்னர்ஜனரல் அவர்களையும் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

## கரந்தைத்தமிழ்ச் சங்கம்.

### ஆண்டுவிழா அறிக்கை

நமது சங்கத்தின் 22ஆம் ஆண்டுவிழா 1933 ஜனவரி, 21, 22 நாட்களில் சங்கக் கல்லூரிக் கட்டிடத்தில் நிகழும். தில்லையம்பதி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியர் தோழர். விபுலாநந்த சுவாமிகள் அவர்கள். பீ. எஸ். ஸி., தலைமை தாங்க இசைந்துள்ளார். சங்கத்தின் உறுப்பினரும் ஏனைய தமிழன்பரும் வந்தருளி விழாவினைச் சிறப்பிக்க வேண்டுமென அமைச்சர் எழுதுகிறார்.

## நாமக்கல் தாலூகா மோகனூர் ஆதிதிராவிட 2-வது மகாநாடு

1—1—33 ஞாயிறு மாலை 3-30 மணிக்கு தோழர் சகஜாநந்தம் எம். எல். சி. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற ஏற்பாடாகி இருந்தவை ஷையார் வர முடியாமல்போனதை முன்னிட்டு சேலம் தோழர் சி. அனந்தாச்சாரியார் பி. ஏ பி. எல். அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அது காலை உள்ளூரிலும், வெளியூரிலுமாக சுமார் 1000 ஜனங்கள் வரை கலந்து கொண்டார்கள். தலைவர்களை ஊர்வலமாக அழைக்கப்பட்டு நந்தனூர் மைதானத்தில் சிங்காரமாக அமைக்கப்பட்ட கொட்டகையில் தலைவர்கள் அமர்ந்தார்கள். தோழர் ஓ. செல்லாண்டி முதலியாரவர்களால் மஹாநாட்டைத் திறந்து வைக்கப்பட்டு உபசாரப்பத்திரம், வரவேற்புப் பிரசங்கம் படிக்கப்பட்டு உபன்யாசங்கள் பல கனவான்களால் நிகழ்த்திய பின் சில தீர்மானங்கள் செய்யப் பட்டு வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் இரவு 9மணிக்கு முடிவடைந்தது.

கூட்ட முடிவிற்குப் பின் உள்ளூர் தோழர் ஓ. செல்லாண்டி முதலியார் மேல்மாடியில் சமபந்திபோஜனம் நடந்தது. பின் சில தீர்மானங்கள் நிறைவேறிய பின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

## திருச்செங்கோடு

### வாலிப சகவாச சங்கம்.

8—1—33 ஞாயிறு மாலை 5-மணிக்கு சங்கக்கட்டிடத்தில் தோழர் ருத்ரம் அவர்களின் தலைமையின் கீழ் தோழர்கள் மகாலிங்கம், டி ஏ. கைலாசம் முதலாயினோர் "ஏகாதசியின் கொடுமை' என்னும் விஷயம் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரையுடனும், வந்தனோபசாரத்துடனும் இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

## பெருவள நல்லூர்

### சுயமரியாதைச் சங்கம்.

10-1-33 மாலை 4-மணிக்குஇவ்வூர் கிராமப் பொதுச் சாவடியில், தோழர் பி. முத்துக் கிருஷ்ணன் ,அவர்கள் தலைமையின் கீழ் நிருவாகஸ்தர்கள் தேர்தல் கூட்டம் நடைபெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ராவ்பகதூர் அப்பாசாமி முதலியார் மரணம்.

9-1-33 இரவு சுமார் 11-மணிக்கு சென்னையில், தென்னாட்டு பிரபல வியாபாரி ராவ்பகதூர் அப்பாசாமி முதலியார் உயிர்துறந்தார். உடனே அவருடைய சொந்த ஊராகிய செங்கல்பட்டுக்கு மோட்டாரில் அவருடைய பிரேதத்தை கொண்டுவந்தார்கள்.

ராவ்பகதூர் முதலியார் தென்னாட்டில், வியாபாரத்தில் பெரிய நிபுணர். அவர் பர்மா ஷெல் கிரோசினாயில், பெட்ரோல் இவைகளுக்கு பல ஜில்லாக்களுக்கு ஏஜண்டாக இருந்து வந்திருக்கிறார். சப் ஏஜண்டுகளுடைய சங்கத்திற்கும் தலைவராக இருந்துவந்தார். இவருக்கு சென்னை, மதுரை, செட்டிநாடு முதலிய ஒவ்வொரு ஊரிலும் கடைகள இருந்து வருகின்றன. மலாய் நாட்டுப் பாக்கு வியாபாரம், நவதானிய வியாபாரம், இதுவும் இவருக்கு உண்டு. தென்னாற்காடு ஜில்லா கூட்டுறவு பாங்கி தலைவராகவும் இருந்துவந்தார்.

10-1-33 செவ்வாய்கிழமை மாலை 9-மணிக்கு எல்லா ஊர் கடைகளிலும் முதலியார் மரண தந்தி வந்ததும் திடுக்கிட்டுப்போய்விட்டார்கள் முதலியாரிடத்தில் வேலை பார்த்துவந்த ஏஜண்டுகளும் குமாஸ்தாக்களும் இன்னதுதான் செய்வதென்றுதெரியாமல் கண்ணீர் சிந்தினர். எல்லா ஊர் கடைகளையும் அன்றையதினம் மூடினார்கள். தென்னாற்காடு ஜில்லா கூட்டுறவு பாங்கியையும் ஒரு நாள் அடைத்தனர். மாலை 5-மணிக்குள் எல்லா ஊர்களிலிருந்தும் ஏஜண்டுகளும் குமாஸ்தாக்களும் இன்னும் அனேக பிரபலஸ்தர்களும், ரயில் மார்க்கமாயும் மோட்டாரிலும் செங்கல்பட்டுவந்து சேர்ந்தார்கள். முதலியார் பிரேதத்தை புஷ்ப பல்லக்கில் ரோஜாப் புஷ்பங்களால் ஜோடித்து இரவு 8-மணிக்கு பெரிய ஊர்வலமாக அதிர்வேட்டுகள் மேளவாத்திய கோஷத்துடன் எடுத்துச் சென்று பாலாற்றங்கரையில் இரவு 10-மணிக்குத் தகனஞ் செய்தனர். எல்லா ஜனங்களும் அமைதியாகக் கீழே உட்கார்ந்தனர். முதலியாருடைய ஜீவிய சரித்திரத்தையும் அவர் பொது ஜனங்களிடத்திலும் தனது குமாஸ்தாக்களிடத்திலும் அன்பு பாராட்டி வந்ததையும் ஸ்ரீ முதலியாரால் பல குடும்பங்கள் ஜீவித்து வந்ததையும் பாராட்டி சிலர் பேசினார்கள். (ஒரு நிருபர்)

## அநுதாபம்.

நாட்டறம்பள்ளிநலவுரிமைச் சங்கத்தின்காரியதரிசிதோழர் ஆர். துரைசாமி அவர்கள்குமாரன்சென்ற6-1-33தேதி வெள்ளிக்கிழமை காலம்சென்றதைக் குறித்து இக் கூட்டம் அவர் குடும்பத்தாருக்கு அநுதாபம் தெரிவித்துக்கொள்ளுகிறது. வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## பொங்கல்.

பொங்கல் என்பது முதலாளிகளும், மிராசுதாரர்களும்
தின்று கொழுக்கும் கொண்டாட்ட தினம்.

சோம்பேரிகள் ஆசீர்வாதம் செய்து
பணம் பறிக்கும் தினம்.

தொழிலாளிகள், விவசாயக்கூலிகள்
பிச்சை எடுக்கும் தினம்.

ழிலாளருக்கு வெற்றி ஏற்பட்ட பிறகு, மூன்று வருஷ காலமாக உலகம் முழுதுமுள்ள பணக்கார வகுப்பார் யாவரும் ஒன்றாய் திரண்டு தங்களை எதிர்த்தபோதும் கூட ருஷிய தொழிலாளர் எதிர்த்து நின்று வெற்றிபெற முடிந்தது.

நம் கண்முன்னால் உலகம் முழுவதும் தொழிலாளர்களின் புரட்சி எப்படிப்பரவுகிறதுஎன்பதை இப்போது கண்டு வருகிறோம்.

நமக்கு எற்பட்டிருக்கும் அனுபவத்திலிருந்து இப்பொழுது ஒன்றுகூற முடியும். அதாவது ஏற்கனவேஒற்றுமையின்றியும், கட்டுப்பாடுகள் இன்றியும் இருந்த குடியானவர்களை ஒன்றுபடுத்தி தன்னுடன் சேர்த்துக்கொண்டு ஒரு மகத்தான சக்தியை சிருஷ்டித்து அந்த சக்தியின் மூலம் எல்லா கொள்ளைக்கூட்டத்தாரின் தாக்குதல்களை எல்லாம் எதிர்த்து நிற்க முடிந்தது. இது தொழிலாளர் வகுப்பைத்தவிர வேறு எவராலும் சாதிக்க முடியாத காரியமாகும். இவ்வகுப்பார் மாத்திரம் தான் கஷ்டப்படும் மக்களுக்கு ஒற்றுமையின் சக்தியை அறிவித்துத் தாங்கள் யாவரும் ஒன்று சேரவும் பொதுவுடைமை சமூகம் கொண்ட புது உலகம் ஒன்றை உண்டாக்கி பெருக்கிக்கட்டி முடிக்கவும் லாயக்குள்ளவர்கள் ஆவார்கள். அதனால் மனித சமூகத்திற்கு அப்பாலிருந்து உற்பவிக்கப்பட்ட ஒழுக்கம் என்பதாக ஒன்று இருப்பதை நாம் ஒப்புக்கோள்வதில்லை. அப்படிப்பட்ட ஒழுக்கம் ஒன்று இருப்பதாகச் சோல்வது மோசடியேயாகும். நாம் சம்பந்தப்பட்டவரை ஒழுக்கம் என்பது மனித சமூகத்தில் தொழிலாளர்கள் நன்மையைப்பொருத்ததேயாகும்.

---

## முன்னுரை.

---

மார்க்சினுடைய போதனைகளில் இருந்து இயற்கையாயும் பிரிக்க முடியாததாயும் உள்ள விஷயம் நாஸ்திகமாகும். விஞ்ஞான (சைன்ஸ்) அறிவுக்கேற்ற மாதிரியில்தான் சமதர்மத்தைப்பற்றிய கொள்கைகளையும், திட்டங்களையும் மார்க்ஸ் போதிக்கிறார். மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் இருவரும் தங்கள் தங்கள் அடிப்படையான தத்துவ நிலை பிரகிருதி வாதம் (உலகாயிதம்) தான் என்றுசொல்லிக்கொண்டார்கள்.

பிரகிருதிவாத தத்துவத்தை வளர்க்கும்பொழுது மார்க்ஸ் ஏஞ்சல்ஸ் இருவரும் மதத்தை ஓட்டிய தத்துவ ஞானங்களையும் ஆராய்ச்சி செய்யவேண்டி வந்தது. 1844-ம் வருஷத்திலேயே "மதத்தைப்பற்றிய ஆராய்ச்சி மற்ற எல்லா ஆராய்ச்சிக்கும் ஆரம்பம்" என்று மார்க்ஸ் சொன்னார். இந்த ஆராய்ச்சியை இவர்கள் முழுவதும் நடத்திமுடித்துவிட்டதால் பிற்காலத்தில் இவர்களது தத்துவ ஞானத்தின் நாஸ்திக அம்சத்தை விவரிக்கவேண்டிய அவசியமில்லாமலேயே யாவரும் ஒத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. மார்க்ஸ் கட்சியைச் சேர்ந்த அனேகரைப்பற்றியும், முக்கியமாக லெனினைப்பற்றியும் இதுவேஉண்மையாகும். ஆகையினால் மார்க்ஸ், எஞ்சல், லெனின் என்ற நமது கர்த்தாக்களின் நூல்களில் அவர்களது தொழிலாளவகுப்பு நாஸ்திகத்தைப்பற்றி அதிக விரிவான விவரங்கள் எதுவும் இல்லாமலிருப்பது ஆச்சரியமல்ல. வெளிப்படையான உண்மையைப் பற்றி வெளியிட்டுப்பேசுவது அனாவசியமாகும்.

இதே காரணத்தினால்தான் பொதுவாய் தொழிலாளர் இயக்கத்தில் நாஸ்திகப் பிரசாரம் அவ்வளவு விளம்பரப்படுத்தப்படவில்லை தொழிலாளர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட பழய காலத்தில் தொழிலாளமக்கள் யாவரும் மதத்தை விட்டுவிட்டார்கள். 1874-ம் வருஷத்தில் ஏஞ்சல்ஸ் அடியில்கண்டவாறு எழுதி இருக்கிறார். அதாவது:—

"ஐரோப்பிய தொழிலாளர் கட்சிகள் எல்லாம் அனேகமாக நாஸ்திகத்தை ஒப்புக்கொண்டுவிட்டன" என்பதாகும் 1909 ம் வருஷத்தில் லெனின் இம்மாதிரியாகவே 'தன் வகுப்பு நிலையை உணர்ந்த சமதர்ம ஜன நாயகக் கட்சியார் இயற்கையாகவே நாஸ்திகர்களாய் இருக்கிறார்கள்' என்று பேசி இருக்கிறார். ஆனால் பிற்காலத்திற்கு தொழிலாளர் இயக்கத்தின் தீவிர பிரகிருதி வாத கொள்கையானது மாறுபட்டு சோஷியல் ஜனநாயக கட்சிகள் சிறு பணக்கார வகுப்பாரின் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களின் மதநம்பிக்கைக்கு இடம் கொடுக்க ஆரம்பித்தன.

1869ம் வருஷத்திய ஏசெனாஷ் (Eisenach) திட்டம் என்னப்பட்ட ஜர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் முதல் திட்டத்தில் விளக்கமாகவும், சரியாகவும் அரசாங்கத்திலிருந்து கோவில் பிரிக்கப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கையில், 1875ம் வருஷத்திய சோஷியலிஸ்ட் தொழிலாளர்கட்சியின் கோதா (Gotha) திட்டத்தில் "மதம் என்பது ஒவ்வொருவரையும் பொருத்ததான் விஷயம்" என்றுகண்டிருக்கிறது. இதன் மூலம் சமயத்திற்குத் தகுந்தாப் போல் வேஷம் போடும் கூட்டத்தாருக்கு இடம் கிடைத்தது. இந்த திட்டத்திற்கு உரை எழுதுகையில் மார்க்ஸ் இந்த மனப்பான்மையைக் கண்டித்து "மதம் என்னும் பேய் பிடித்திருப்பதிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டியதே தொழிலாளர் கக்ஷியின் கடமை" என்று குறிப்பிட்டு, "ஆனால் இந்தக் கூட்டத்தார் பணக்கார வகுப்பாரின் கட்டுப்பாட்டிற்கு மீறி நடப்பது கூடாதென நினைக்கிறார்கள்" என்று கோபத்துடன் கூறுகிறார். 1891ம் வருஷத்தில் தயாரிக்கப்பட்ட இர்புர்ட் (Erfurt) திட்டத்திலும் ஜர்மன் சோஷல் ஜன நாயகக் கட்சியார் இதே எண்ணங்களையே சொல்லிக் கொண்டிருந்தார்கள். அத்திட்டத்தின் ஆறாவது பாகத்தில் பாதிரி மதக் கூட்டங்கள் தனித்த மனிதர்களின் சபையாக கருதப்பட வேண்டும்" என்று கண்டிருக்கிறது.

இந்தப் பாகம் எப்படி அமைக்கப்பட வேண்டும் என்று ஏஞ்சல்ஸ் எழுதுகின்ற காலத்தில் "எல்லா மத கூட்டங்களும் ஒன்று கூட விடப்படாமல் தனிப்பட்ட நபர்களின் சபையாக அரசாங்கத்தாரால் பாவிக்கப்பட வேண்டும். அவைகளுக்கு பொதுப்பணங்களில் இருந்து ஆதரவு அளிக்ககூடாது. அவைகளுக்கு பொதுக்கல்வி விஷயத்தில் எவ்வித ஆதிக்கமும், சம்மந்தமும் இருக்கக் கூடாது" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஏஞ்சல்சுடைய இந்த அபிப்பிராயத்தை சோஷியல் ஜனநாயகக் கட்சியார் நிராகரித்ததோடு, அதை கட்சி அங்கத்தினர்களுக்கு 1901 வருஷம் அக்டோபர் மாதம் வரை தெரிவிக்கவும் இல்லை. கட்சியின் இவ்வித மனப்பான்மை அனுதவத்திற்கு எவ்வித அர்த்தம் கொடுத்ததென்றால் "மதம் என்பது ஒவ்வொருவருக்கும் சொந்த விஷயம் அதாவது கட்சியின் அங்கத்தினர்களில் ஒருவர் மதத்தில் நம்பிக்கை வைத்திருப்பதும் வைக்காமல் இருப்பதும் கட்சிக்கு சம்மந்தப்பட்டதல்ல" என்பதாகும்.

இதே மாதிரியாகவே மற்ற தேசங்களில் உள்ள சோஷியல் ஜனநாயகக் கட்சிகளும் நடந்து கொண்டன வாகையால், மார்க்ஸ் உடைய கொள்கை மதத்திற்கு விரோதமானதல்ல வென்கின்ற எண்ணம் சோஷியல் ஜனநாயகக் கட்சியாரிடம் பரவியது. மேலும் சோஷியலிஸ்ட் இயக்கத்தின் அனேக பிரிவுகள் தங்களுடைய கொள்கைகள் மதத்திலிருந்தே உதித்ததாக சொல்லிக் கொண்டன. உதாரணமாக அமெரிக்க சோயஷலிஸ்ட்டு கட்சியின் தலைவர்களையும் இங்கிலாந்து தேசத்து சுயேச்சை தொழிலாளர் கட்சியையும் சொல்லலாம். இந்த மாதிரி சோஷலிஸ்ட்டு கொள்கைகளை திரித்து, இவைகளையே மதமூட நம்பிக்கைகளைதொழிலாளிகளிடம் பரப்புவதற்கு ஆதாரமாக சமய வேஷதாரிகள் உபயோகித்தனர். மகாயுத்தத்திற்கு பிறகு சோஷியலிஸ்ட்டு ஜன நாயகக் கட்சியார் வெளிப்படையாகவும் உறுதியாகவும் மார்க்ஸ் உடைய கொள்கைகளை நிராகரித்து விட்டு மத ஆதரவைத் தேட ஆரம்பித்தனர். ஆகையால் பொது உடமை கட்சிக்காரர் மதத்தைப் பற்றிய தங்கள் அபிப்பிராயத்தை மறுபடியும் எடுத்துக்காட்ட வேண்டியது மிகவும் அவசியமாகி விட்டது. இந்த அபிப்பிராயம் லெனின் கட்டுரைகள் அடங்கிய இச்சிறு புத்தகத்தில் தெளிவாக விளங்குகின்றது. இவற்றி நின்றும் தொழிலாளர்களை மதம் என்னும் போதையில் மயங்காமல் தடுப்பதற்கு என்னென்ன வழிகளை பின்பற்றவேண்டுமென்று லெனின் அபிப்பிராயப்பட்டார் என்பது விளங்கும்.

1902-ம்வருஷம் முதல்1922-ம் வருஷம் வரை உள்ள காலத்தில் மதம் என்னும் விஷயத்தைப்பற்றி லெனின் எழுதிய கட்டுரைகள் கடிதங்கள் ஆகியவற்றில் முக்கியமானதைமட்டும் இச்சிறு தொகுப்பில் வெளியிடப்பட்டிருக்கின்றன. 1908-ம் வருஷத்தில் லெனின் எழுதிய "பிரகிருதி வாதமும் விஞ்ஞான சோதனையும்" என்ற புத்தகத்தில் மதஎண்ணங்களை தழுவிக்கும் ஆன்மவாதம் பரிசிலனை செய்யப்பட்டிருப்பதோடு பிரகிருதிவாத தத்துவமும் நன்றாய் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

இத்தொகுதியில் உள்ள முதல் கட்டுரை 1905-ம் வருஷத்திலும், இரண்டாவது கட்டுரை 1909-ம் வருஷத்திலும் எழுதப்பட்டவை. தறுகாலம் தொழிலாளர் இயக்கம் மதத்தைபபற்றி என்ன மனப்பான்மையைக் கொண்டிருக்கிறது என்ற விஷயத்தைப்பற்றி

மார்க்ஸ் கூ...ச ...லைவர் ஒருவர் எழுதிய விசாரணைக்கட்டுரைகள் வேண்டுமென்றால் இவ்வ...று ... தவிர வேறு ஒன்றும் இல்லை ... து

மூன்றாவதுகட்டுரையில் இரண்டாவது கட்டுரையில் போலவே சார் சக்கரவர்த்தி காலத்தில் டூமா சபையில் (பார்லிமெண்டில்) மதத்தைப்பற்றி நடந்த விவாதங்களை ஆராய்ச்சி செய்து பிற்போக்கான கோவில் விஷயத்தைப்பற்றி தாராள நோக்கமுள்ள பணக்கார வகுப்பாரின் மனப்பான்மை எவ்வளவு தூரம் பலஹீனமாகவும் பிற்போக்கானதாகவும் இருந்ததென்று விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது. (இந்தக் கட்டுரை மொழி பெயர்க்கப்படவில்லை.) நான்காவது கட்டுரையில் 19..-ம் வருஷத்தில் வைதிக நம்பிக்கையுடையவர்களுக்கும் தாராள நோக்கமுடைய ஒரு பிரபுவுக்கும் நடந்த வாக்குவாதத்தின்போது எழுதப்பட்டது. அந்த சமயம் வைதிகர்கள் மதம் பிரயோஜன மற்றது என்று ஒப்புக்கொண்டது முக்கிய விஷயமாகும்.

இந்த தொகுதியின் ஐந்தாவது கட்டுரை 1922ம் வருஷத்தில் "மார்க்ஸ் கொடியின் கீழ்" என்ற விஞ்ஞான பாஷ்யக் பத்திரிகையின் முதல் இதழில் முன்னுரையாக லெனின் எழுதியது. இதில் கட்சிக்கு உள்ளும், கட்சிக்கு வெளியிலும் இடைவிடாமல் நாஸ்திகத்தைப் பரப்புவதற்கு பாடுபட வேண்டிய அவசியத்தை லெனின் வற்புறுத்துகிறார். நிரந்தரமாக நாஸ்திகத்தைக் கொண்டவர்களும் பிரகிருதிவாதிகளும் ஒன்று சேர்ந்து ஒரே முகமாக வேலை செய்ய வேண்டுமென்று லெனின் தூண்டுவது முக்கியமானது.

டால்ஸ்டாயைப் பற்றிய கட்டுரை 1908-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. இது சிறந்த ஐரோப்பிய தேசத்திலுள்ள படித்த வகுப்பாரைத் திக்கிடச் செய்...ம். ...இதுவரை அவர்கள் படித்த பெரிய பெரிய நூல்களில் எல்லாம் டால்ஸ்டாயைப்பற்றி அறியாத விஷயங்களை சில வாக்கியங்களில் லெனின் குறிப்பிட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். சா...த்திர பூர்வமான பி...ருத்வா...ம் என்னும் ஆதா...த்...க்...க ...ஆராய்ச்சி செய்து டால்ஸ்டாயின் கொள்கைகளுக்கு ஆதாரமாகவுள்ளவைகளும் பத... வண்ணங்களை வேர்களைத் தோண்... எடுக்கிறார். இந்த சமயத்...ல் பட...

...தியக்கத்திற்கு குடியானவர்களின் உணர்ச்சி எவ்வளவு அவசியம் என்பதையும் விளக்க...க்காட்டுகிறார்.

---

## சேலம்.

### சுயமரியாதைச்சங்கம்.

ஷை சங்கத்தின் ஆதரவில் 1-1-33ந் தேதி செவ்வாய்ப் பேட்டையிலுள்ள சங்கப்பபார்க்கில்தோழர் ஆர். நடேசன் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள் ஏ. எம். பாலு, ஏ. சித்தையன், மருதாசலம், எஸ். சி. கந்தசாமி, அமிர்தலிங்கம், வையாபுரி, நாராயணசாமி முதலியவர்கள் சமதர்மத்திட்டங்கள் என்பது பற்றி உருக்கப்பேசினார்கள் தலைவர் முடிவுரையுடன் கூட்டம கலைந்தது.

ஷை சங்கத்தின் மற்றொரு கூட்டம் 7-1-33 ந்தேதி 1933-ம் ஞு நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தோழர் பி. என். ரங்கசாமி தலைமையில் கூடியது. கூட்டத்திற்கு சுமார் 100-அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தனர். பின் நிர்வாகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்த பின் கலைந்தது.

ஷை சங்கத்தின் மூன்றாவது கூட்டம் 8-1-33ந்தேதி தோழர் ஏ. எம் பாலுசாமி அவர்களின் தலைமையில் கூடியது அதுசமயம் சுயமரியாதைத் தோழர்கள். ஆர். நடேசன், ஜலகண்டாபுரம் எஸ். ராமநாதன் ஏ. சித்தையா ஆகியவர்கள் தொழிலாளர்களின் துயரமும், முதலாளிகளின் ஆதிக்கமும் என்பது பற்றி உருக்கமாகப் பேசியபின் கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## கோயமுத்தூர்.

---

### சுயமரியாதை வாலிபர் சங்கம்.

கோயமுத்தூர் சுயமரியாதை வாலிப சங்கத்தின் ஆதரவில் சென்ற 25—12—32 ஞாயிறன்று இரவு 6-30 மணிக்கு தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டது. அவ்வமயம், தோழர்களான இராமதாஸ், கஸ்தூரி முதலியோர்கள் சுயமரியாதைக் கீதம்பாடினார்கள். பின்னர்தலைவர் முன்னுரைக்குப்பின், ஈரோடு தோழர் அ இரத்தினசபாபதியவர்கள் "பசிப்பிணியும், தீர்த்தி மருந்தும்" என்னும் பொருள் பற்றி 2 மணிநேரம் உணர்ச்சி ததும்பச் சொற்பெருக்காற்றினர். ரஷியத்திட்டங்கள் மேற்கோள்களாகக் காட்டப் பட்டன. இறுதியில் தலைவரின் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது முடிந்தது.

1-1-33உ தோழர்கள் ஜி. அப்பாதுரையார், இரத்தினசபாபதி, அன்னபூரணி முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்களென அறிவிக்கும் துண்டுப்பிரசுரங்கள் முன்னதாகவே வழங்கப்பட்டிருந்தன. தோழர்கள் மூவரும் ஈரோட்டிலிருந்து 1-1-33உ பகல் வண்டியில் கோவை வந்து சேர்ந்தனர். பகலில் தோழர் சிவானந்தம் அவர்கள் வீட்டிலும், மாலையில் சங்க உதவிக்காரியதரிசி தோழர். சுப்பிரமணியம் அவர்கள் வீட்டிலும் விருந்து நடந்தபின்னர் இரவு 7 மணிக்குச சுயமரியாதைச்சங்கத்தில் கூட்டம் கூடிற்று. தோழர் ஏ. ஆர். சிவானந்தம் தலைமை வகித்தார்.

தோழர் இராமதாஸ் சுயமரியாதைக்கீதம் பாடினார். தலைவரின் முடிவுரைக்குப்பின் கோலார் தங்கவயல் தோழர் ஜி. அப்பாதுரையார் அவர்கள் "சமதர்மம்" என்னும் பொருள் பற்றிப்பேசினார். மதங்களின் அநியாமையும், கடவுள் என்ற பதத்தின் அர்த்தமற்ற தன்மையும் நன்கு விளக்கப்பட்டன. பின்னர் தோழர் அ. இரத்தினசபாபதி எழுந்து அதைத்தழுவிப் பேசினார். பின்னர் தோழர். ஆர். அன்னபூரணியார் "புதிய உலகில் பெண்கள் இயக்கம்" என்பதுபற்றி பேசினார். கூட்டம் உணர்ச்சிகரமாகக் காணப்பட்டது. கடைசியில் தலைவரின் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது. அன்றிரவு தோழர் சுப்ரமண்யம் வீட்டில் விருந்து நடந்தது. மறுநாள் காலையில் தோழர்கள் மஞ்சளாபாய்—ஜானேஜிராவ் அவர்கள் விருந்தொன்று செய்தனர். பகல் வண்டியில் தோழர்கள் ஈரோட்டுக்குப் பிரயாணமானார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## திருமலை சேரி

---

வாலாஜா தாலூகா திருமலை சேரி என்னும் கிராமத்திலுள்ள தாழ்ந்த ஜாதியார் என்று சொல்லப்படுவோர்களை உயர்ந்தஜாதிக்காரர் என்று சொல்லிக் கொள்ளப் படுகிறவர்களால் அதிககொடுமைக்குள்ளாக்கி வருவதாகவும், சர்க்கார் பாதைகளில் நடக்கக் கூடாதென்றும், சர்க்காரால் அவர்களுக்குக்கொடுக்கப்பட்டுள்ள மயானத்தில் பிணங்களைப் புதைக்கக் கூடாதென்றும் தடுத்துவருவதாகவும் பலரிடமிருந்து நமக்குக்கடிதங்கள் வருகின்றன.

தாழ்த்தப்பட்ட மக்களது குறைகளுக்காகப்பேரிரைச்சல் கேட்கப்படுகின்ற இக்காலத்தில் அவர்களது சாதாரண உரிமைகளுக்கே இடையூறு செய்யும் ஆணவம் வெறுக்கத்தக்கதாகும். ஷைமக்கள்பொறுமையிழந்து தங்கள் உரிமைகளைத் தாங்களே எடுத்துக்கொள்ளும் நிலைவருவதற்கு முன்னர் அதிகாரிகள் கவனித்துத் தக்கது செய்ய வேண்டுகிறோம்.

---

## 'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. ...ன்.

வ ஷை சந்தா—2—8—0

விலாசம் ...—சமத்வபோதினி

டிக்கோயா சிலோன்.

---

நோட்டீஸ்.

## திருப்பூர்

## டி. மு. கோர்ட்டில்.

1932-ஞு O. P. No. 23.

1932-ஞு I. A No. 1504.

லெட்சுமியம்மாள்—மனுதாரி

ஷை மெம்பரில் மனுதாரியின் புருஷனை ரங்கசாமி அய்யங்காருக்கு திருப்பூர் Building கோ-ஆப்ரேடிவ் சொஸைடியிலிருந்து வரவேண்டிய தொகைரூபாய் 400-0-0க்கு ஷைரங்கசாமிஅய்யங்கார் இறந்து போன படியால்ஷையாருக்குதான் வாரிசு என்று சொல்லி பாத்திய சர்டிபிகேட்டு பெற்றிருப்பதால் ஷை சர்டிபிகேட்டுடன் ஷை 400 ரூபாயுக்கும் சேர்த்துப் பாத்திய சர்டிபிகேட்டு கொடுக்க வேணுமாய் மனுக் கொடுத்து அது வாய்தா 16-1-33 உ போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபணையுள்ளவர்கள் அன்று பகல் 10 மணிக்கு ஆஜராய் கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

ஜி. ஆர். ஜெகதீசசாஸ்திரியார்,
மனுதாரி வக்கீல், 20—12—32.

---


## கண்ணையும்

## காதையும்

## கவனித்துக் கொள்ளுங்கள்

## பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

## செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கறையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta

---

## குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பாரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta (k)


ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## மதிப்புரை

"இளைஞர் பாடல்கள்" என்ற தமிழ் நூலொன்று வரப்பெற்றோம். அஃது கோவைத் தமிழ்ச்சங்க அமைச்சரும், பொதுநல உழைப்பாளரும், தமிழ் மொழி வல்லுனருமான தோழர். ராவ்சாஹிப் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் பி. ஏ பி. எல். அவர்களால் இயற்றப் பெற்று கோவைத் தமிழ்ச்சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. இந்நூல் எளிய நடையில் புதியமுறையில் இளைஞர்களுக்கு உணர்வு ஊட்டும் நோக்குடன் கடவுள், ஞாயிறு ஒழுக்கம், நிலா. மழை, யாறு, கல்விவிளையாட்டு, ஆகாயவிமானத்தில் முதல் அநுபவம், நாட்டுப்பற்று அல்லது தாய்நாடு, முதலிய பல்வேறு பொருள்களைப் பற்றியும் மலையும் அணியும். ஹரிச்சந்திரன் என்னும் சிறுகதைகளை விளக்கியும் செய்யுள் ரூபமாக சாதாரண மக்களும் அறியும் வண்ணம், எழுதப்பட்டுள்ளது. கடவுளுணர்ச்சியையும், சோதிடப்பெருமையையும், இயற்கைக்காட்சியின் தன்மையையும், தேசிய உணர்ச்சியையும் கார்த்திகைத்திருநாள் முதலிய பல விழாக்களின் அருமையையும் பற்றிய நம்பிக்கை உடையோருக்கும் தமிழின் பெருமையையும் கவிச் சுவையை அறிய விரும்புபவர்களுக்கும் இந்நூல் மகிழ்ச்சியைத் தரத்தக்கதாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழ் பெருமையையும் கவி இன்பக்கலையையு மக்களுக்கு ஊட்ட வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீது இயற்றப்படும் நூல்கள் இம்மாதிரி ஆத்திகப் பிரசாரத்துக்கும் பயன்படும்படியாய் இல்லாமல் பகுத்தறிவு பிரசாரத்திற்கே பயன்படும்படி இருந்தால் மாத்திரமே அவை மக்கள் சமூகத்திற்கு நன்மைபயக்க, நீடூழிவாழ இடமுண்டு. அங்ஙனமில்லாமல் இனியும் தேரையும், திருவிழாவையும், நோன்பையும் விரதத்தையும் கொண்ட புராணக்கதைகள் தமிழ் பெருமை வேஷத்தில் வந்தாலும், கவியின்பக்கலை வேஷத்தில் வந்தாலும் அவற்றிற்கெல்லாம் உலகில் இனி இடம் கிடைப்பது என்பது மிக அருமையே யாகும்.

எனினும் தோழர் இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்களால் இயற்றப்பட்ட இந்நூல் 100க்கு 75 பாகம் யாவரும் பாராட்டும் வண்ணமே அமையப்பட்டிருக்கிறது கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இதன் விலை குறிப்பிடவில்லை. வேண்டுவோர் கோவை தமிழ் சங்கத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

---

## அடுத்தவாரம்.

அடுத்தவாரம் தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்ட ஆஸ்திக—நாஸ்திகவாதம் என்ற இரண்டாம் கட்டுரை வெளிவரும். (ப—ர்)

## ஈரோடு மோட்டார் சொந்தக்காரர் சங்கம்:-

டை சங்கத்தின் வாரந்திரக் கூட்டம் பவானி யூனியன் மோட்டார் செட்டில் தோழர் கோவிந்தசாமியவர்கள் தலைமையில் 31—12—32 மாலை 5 மணிக்கு கூடியது. மோட்டார் சொந்தக்காரர்கள் பொது ஜனங்களுமாக சுமார் 200 பேர்கள் கூடியிருந்தார்கள். தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர் இரத்தின சபாபதி அவர்கள் சிறிது பேசியபின் சுயமரியாதை இயக்க ஸ்தாபகரும் "குடி அரசு" ஆசிரியருமாகிய தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள். சங்கத்தின் அவசியத்தையும், முதலாளிமார்களின் கடமையையும் தொழிலாளர்களிடம் நடந்து கொள்ளவேண்டிய முறையையும் ஜில்லா போர்டார், முனிசிபாலிட்டியார்கள் மோட்டார் சொந்தக்காரர்களுக்குச் செய்யும் கஷ்டங்களையும் அதை நிவிர்த்திக்க வேண்டிய முறையையும் போலீஸ்காரர்கள் செய்யும் அட்டூழியத்தையும் விரிவாய் விளக்கிக் கூறினார்.

பின்னர் தலைவர் முடிவுரை கூறியதும், வந்திருந்தோரனைவருக்கும் ஒரு சிற்றுண்டி விருந்து நடைபெற்றபின் இரவு 8 மணிக்குக்கூட்டம் இனிதுகலைந்தது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மதுரை சுயமரியாதைச் சங்கம்.

மதுரை சுயமரியாதைச்சங்கத்தின் வருடாந்திர அங்கத்தினர் பொதுக் கூட்டம் 21-12-32 மாலை 7மணிக்கு தோழர் அ. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடந்தது சங்கத்தின் 1931—32-ம் ஆண்டு வரவு செலவு கணக்குகள் வாசிக்க பட்டது. சங்கத்தின் ஆண்டுவிழாவை ஜனவரி மீ த்தில் மகாநாடு நடக்கும் சமயத்தில் வைத்துக் கொள்வதென்று முடிவு செய்திருந்த படியால் புது வருடத்திற்கு உத்தியோகஸ்தர்கள் தேர்தல் நடைபெற்றது. தோழர் ஆர். ஷண்முகம் அவர்களைத் தலைவராகவும், தோழர் கே. ஆதம் அவர்கள் உபத்தலைவராகவும் தோழர்களான எ. என். வெங்கிடசாமி, எ. எஸ். அருணாசலம் காரியதரிசிகளாகவும், தோழர் பி. வி. விநாயகமூர்த்தி பொக்கிஷதாராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். 15 நிர்வாக சபை மெம்பர்களும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். சங்கநோக்கத்திலும், விதிகளிலும், எடுத்தும், திருத்தியும் அமைக்கப்பட்டது. வந்தனோபசாரத்திற்குப்பின் கூட்டம் கலைந்தது எனக் காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

---

## திருச்செங்கோடு.
### வாலிபசகவாச சங்கம்.

1-1-33 ஞாயிறு மாலை சுமார் 4-30 மணிக்கு ஷை சங்க வாராந்திரக் கூட்டம் கூடப்பட்டது. கூட்டத்திற்கு தோழர் மகாலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்கள் டி. எ கைலாசம். எஸ். கே. நாகராஜனு முதலாயினோர் "சுயதர்மம்" என்னும் பொருள்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினோர்கள். பின்பு இரவு 8மணிக்குத்தலைவர் முடிவுரையுடனும் வந்தனோபச் சாரத்துடனும்கூட்டம் இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.


## தொக்கோகம்.

அதிவீர ராமபாண்டியன் பாடியது மூலமும் உரையும் கவிகோ பயின்ட் 64 வகை சித்திரின் ப அசல் கிளேஸ் போட்டோ படங்கள். சதிபதிகளும் தனிமாதர்களும் சேர்ந்த தனி கட்டடத்தோடு இரண்டு ரூ. 5-0-0

வெளி நாட்டினர் ரூ. 5 8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

T. G பாக்கியம் & கோ.
சேப்பேரி, சென்னை.

ஈ. வெ. ராமசாமியின்
இலங்கை
சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100-புத்தகம் ரூ1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
'குடி அரசு" ஈரோடு.

ANANGARANGABATIKA
*(Enjoyment Pill)*
DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY
and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.

Complete satisfaction guarenteed. Money refunded in case of failure Price for 60 Pills Rs. 8 Sample phial of 20 Pills Rs 3 only. Please write in ENGLISH.

**"SAILASRAM" (K)**
*Chandanpur,*
**(Khulna) E. B. R.**

193ஆம் காலண்டர் இனம்!
மதன காமேஸ்வரி லேகியம்.

பெயர்பெற்ற மலபார் கஞ்சா தாது புஷ்டி மருந்து இதுவே. ராத்தல் 1-க்கு ரூ. 8. தபாற் செலவு அணா 8. கேட்லாக் இனாம்.

சித்தஔஷதவைத்தியசாலை, A. போஸ்டு, மூல்லச்சேரி,
தென் மலையாளம்.

"SUPERSTITION OF KHADI"
A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S Varadachari in English.
Price annas. 0 2 0

## மாதர்களுக்கு
இது கண்கண்டது.
கெர்ப்ப சஞ்சீவி

மாதர்க்கு காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும் சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம் சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம்உண்டாகும்மிக அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அன்னிய நாட்டார் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.



மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி S. I.

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

டால், நாங்கள் சொல்லுவதில்லை வேதம் சொல்லுகிறது என்கிறார்கள். அப்படிச்சொல்லும்வேதம்சரியானதாயென்றால் வேதத்தைநாங்கள் செய்யவில்லை வேதம் "அபௌருஷேயம்" புருஷனால் செய்யப்படாதது; கடவுளால் சொல்லப்பட்டதுஎன்கிறார்கள். அப்படியும் கடவுள் சொல்லியிருப்பாராயென்றால் அவை பூர்வீக சனாதன தருமமென்கிறார்கள். என்னையா சாஸ்திரிகளே, நாங்கள் தான் தேவடியாள் மக்கள், எங்கள் அப்பன் பாட்டன் முப்பாட்டன் கூடவா தேவடியா மக்கள் ஒழுக்கம் கெட்டவர்கள் என்று கேட்டால் அதுகேட்க சூத்திரனுக்கு அதிகாரமில்லை, வேதவித்துக்களான ரிஷிகளல்லவா அதை நிச்சயம் செய்தார்கள். எங்களுக்கு வேதமே பிரமாணம் வேதத்திற்கு விரோதம் பேசுகிறவன் ஆஸ்திகனாகமாட்டான்; வேதத்தைநிந்தித்தால் மகாபாவம், அது பகவான் வார்த்தை பெரியவர்கள் வாக்கல்லவா? ஈஸ்வர நிச்சயமாயிற்றே அவரவர்கள் வருண தருமத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்றே பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் சொல்லியிருக்கிறார். ஈஸ்வர பக்திக்கு எல்லோரும் பாத்திரவாளாக வேண்டும் பகவான் கிருபை எல்லோருக்கும் சமமாகத்தானிருக்கிறது. சந்திரனையும், சூரியனையும் உண்டாக்கின பகவானுக்குத் தெரியாததா நமக்குத் தெரியும் என்று பேசி விடுகிறார்கள்.

ஒரு கூட்டத்திற்கு இனனொரு கூட்டம் தாசிமகன் எப்படியென்று கேட்டால் மேற்சொன்னபடி ஒன்றிற்கு ஒன்று சம்பந்தமில்லாமல் பேசிவிடுகிறார்கள். இதையெல்லாம் கேட்ட நாங்கள் அந்த வேதத்தையும் அதைச் சொன்ன கடவுளையும் அதை ஆதாரமாகக்காட்டி ஆதிக்கம் செலுத்துகிறவர்களையும் கண்டித்துக் குற்றம் சொன்னால் மானமில்லாதபார்ப்பன தாசிமக்களும், உணர்ச்சியில்லாத; ஒழுக்கம் கெட்டவர்களும், ஆசாரமில்லாதவர்களும்,பண்டிதர்களும்சித்தாந்தி வேதாந்திகளும் சொன்னவர்களை விட்டு சிபார்சுக்கு வருகிறவர்களை நிந்தித்தார்கள், குற்றம் சொன்னார்கள், சமய சாஸ்திரங்களையும்,பெரியவர்களையும் நிந்திக்கிறார்களென்கிறார்கள். நாஸ்திகர்களென்கிறார்கள், கல்வி யில்லாதவர்களென்கிறார்கள். பார்ப்பான் தவிர மற்றெல்லாரும் தாசி மக்கள், ஒழுக்கம் கெட்டவன், அடிமை என்று சொல்லும் பார்ப்பார்களுக்குச் சமாதானம் சொல்லுவதா? வேத ஸ்மிருதிகளின் கொடுங்கோலைச் சொல்லுவதா? சனாதன தருமத்தின் நியாய விரோதங்களை எடுத்துக் காட்டுவதா? நம்மவர்களுக்கு நாமே சமாதானம் சொல்லிக் கொண்டிருப்பதா? இதிகாசபுராணங்களின்ஏமாற்றுகளை எடுத்துக் காட்டுவதா? கவியின்பத்திலும் சொல்லடுக்கு நேர்த்தியிலும் சோர்ந்து கிடக்கும் பண்டிதனுக்குப் பழைய பாடத்தைத் திருப்புவதா? முன் பார்ப்பானைக் குற்றம் சொன்னார்கள் இப்பொழுது சமய சாஸ்திரங்களைக் குற்றம் சொல்லுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். சமய சாஸ்திரங்களில் தானே சூத்திரன் தாசி மகன், ஒழுக்கம் கெட்டவன் கண்டதைப் புசிப்பவன் என்று எழுதி வைத்திருக்கிறது என்று எடுத்துக்காட்டினாலும், எப்படியானாலும் கடவுளைக் குற்றம் சொல்லலாமா வென்று பக்த சிரோன்மணிகள் கேட்கிறார்கள். எந்த தெய்வத்தை இந்து சமயம் தெய்வமாகச் சொல்லுகிறதோ அந்த தெய்வம் தானே சூத்திரன் பார்ப்பானின் தாசி மகனென்று சொல்லுகிறது என்று பார்ப்பார்கள் தானே சொல்லுகிறார்கள், அப்படிச் சொல்லுவதைக் கடவுள் என்று எப்படிச் சொல்லுவது; அப்படிச் சொல்லும் கடவுள் தானே உன் சடங்கு, கிரிகை, சமயம் சாஸ்திரம், கோவில், உன் நெற்றி இவைகளிலெல்லாம் விளங்குகிறது; அந்தக் கடவுள் கூட பார்ப்பாரத் திருமேனியுடன் விளங்குகிறார் என்று தானே சமய ஆச்சாரிகள் பாடல்களும் உபதேசங்களாகவுமிருக்கிறது.

லார்டு கர்சன் இந்தியாவிற்கு வைசிராயாகவிருந்தார். அப்பொழுது இந்துக்களெல்லாம் பொய் சொல்லுகிறவர்களென்றார், அந்த வார்த்தையை அவர் திரும்பிப் பெற்றுக்கொள்ளுகிறவரையிலும் அவரைக் கண்டித்தார்கள். நமது தெய்வங்களை விட எத்தனையோ காரியத்திற்கும் ராஜ்யத்திற்கும் பொருப்பாளி வைசிராய்.

நம்மில் பலர் சற்சூத்திரர்கள் என்பதில் திருப்தி அடைகிறார்கள் என்று நினைக்கிறேன். சற்சூத்திரனென்றால் நல்ல தாசி மகன் நல்ல அடிமை, நன்றாக ஒழுக்கம் கெட்டவன், நன்றாக ஆசாரமில்லாதவன் நன்றாகக் கண்டதை உப்பு புளியில்லாமல் புசிப்பவன்என்பது தானே அர்த்தம். சுவாமி வேதாசலமும் இப்படியே அர்த்தமெழுதியிருக்கிறார். இதைவிடவேறு பொருளிருந்தால் சைவ சித்தாந்தியான பண்டிதர் கோயமுத்தூர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்குத் தான் தெரியும், அவர் தெரியப்படுத்தினால் விசேடமே.

தெய்வத்தால், மதத்தினால் வருணிக்கப்பட்ட நான்கு வருணங்களில் இரண்டு அழிந்து போனால் மற்ற இரண்டு மட்டுமெப்படி யிருக்கும்? பிரமாவுடைய மார்பும், தொடையும் ஒழிந்து போனால் தலையும் காலும் ஒட்டிக் கொண்டு சஞ்சரிக்குமோ? க்ஷத்திரியன், வைசியன் என்கிற வருணமில்லை என்கிறார்கள் பழய சனாதன தரும வேதத்தில் வருணிக்கபட்ட பிராமணனே இல்லைபிராமண தருமத்தை பகிரங்கமாகப் பார்ப்பான் விட்டு விட்டார்கள். பார்ப்பான் தாசி மக்களென்னும் ஒரு ஜாதி யிருக்குமா, அதன் உண்மை தெரிந்தால் ஒத்துக் கொள்ளுகிற ஜாதியுண்டா? ஆகவே நாலு ஜாதியும் வருணாச்சிரம தருமமென்றும் ஒழிந்ததென்பது தானே பிரத்தியக்ஷம் அப்படியிருக்க அனேக காலத்திற்கு முன் எழுதி வைத்தஏட்டைக் காட்டி வருணாச்சிரம தருமத்தை நிலை நிறுத்தப் பார்ப்பது பால் பாயாசத்திற்கும் பாதகாணிக்கைக்கு யல்லாமல் வேறெந்த தருமத்தைக் காப்பாற்ற வென்பதை எல்லோரும் ஆலோசித்துப் பாருங்கள்.

ஒழுக்க மில்லாத பாப்பார்கள் சனாதன தருமமென்கிற பழய ஏற்பாடு வேண்டுமென்கிறார்கள் இது பல நாள் சேர்ந்த மடமை,மட்டுமல்ல, மற்றவர்களை யெல்லாம் மடையர்களென்று நினைப்பது மட்டு மல்ல, மற்ற சமூகங்களில் உணர்ச்சியற்ற படித்தவர்களைப் பார்ப்பது மட்டுமல்ல, விவேகமில்லாத பணக்காரர்கள் தானமென்றும் பிராயச்சித்தமென்றும், திதி யென்றும், திவசமென்றும், கருமாந்திர மென்றும், கலியாணமென்றும் அள்ளிக் கொடுப்பது மட்டுமல்ல. மேல் உத்தியோகஸ்தனுக்கு பயந்திருப்பது மட்டுமல்ல சாஸ்திரத்தினால் சுற்றிப் பிடித்து சுடுகாடு போன பின்னும் பார்ப்பானைக் கட்டி அழ வேண்டுமென்னும் தருமமட்டுமல்ல, பகுத்தறிவில்லாத மற்றவர்கள் புரோகித னென்றும், குருவென்றும், ஆச்சாரியனென்றும் அவர்கள் கிரிகை யென்றும் அதற்கு அள்ளிக் கொடுப்பதே தன்பெருமை யென்றும் நினைக்கும் அறியாமையின் குணமேயாகும். அந்தக்குணம் சமுகத்திடை அதிக வேர் ஊன்றியதினால் தான் ஒழுக்கம் கெட்ட பாப்பானாயிருந்தாலும் பிராமணன் தான் ஒழுக்கமிருந்தாலும் மற்றவர்களெல்லாம் சூத்திரர்கள் தான் என்கிறார்கள் மனித தன்மையும் மரியாதையும் வேண்டுமென்கிறவர்களுக்கு இதை விட நான் எழுத வேண்டுவது என்ன விருக்கிறது.

சண்டாள னென்றால் சூத்திர ஆணுக்கும், பிராமணப்பெண்ணுக்கும் பிறந்தவர்களென்று கடவுள் சொன்ன சாஸ்த்திரத்திலிருந்து சாஸ்திரிகள் சொல்லிவிட்டார்கள். அதுவும் விசேடம். சூத்திரன் பிராமணப்பெண்ணை நினைத்தால் மாரைப்பிளப்பது; தொட்டால் கையை வெட்டுவது; சேர்ந்தால் மூனறையுமறுப்பது அல்லது தலையை வெட்டுவது இதுவே முன் காலத்து தண்டனை. இத்தனை தண்டனையும் ஏற்றுக்கொள்ள தயாராய் பிராமணப்பெண்ணிடம்வந்த சூத்திரனும், அதற்கு உடன்பட்ட பிராமணப்பெண்ணும் எத்தனை வேண்டுமையா ஆறுகோடிச்சண்டாளர்களை உண்டு பண்ண என்பதைஎல்லாரும் ஆலோசித்து வையுங்கள் அடுத்த வியாசத்தில் நானும் அதைப்பற்றி எழுதுகிறேன்.

---

## பேரளம்

குடியரசு கிடைக்குமிடம்.

ச. வை. குப்புசாமி,

புகையிலை மண்டி,

ஜனரல் மர்ச்சண்ட்.

---


## டாக்டர் சிங்காரம் அவர்களின்

## கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரு. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அன் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. சிதம்பர ரகசியம் ... 0—8—0
2. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
3. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
4. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
5. சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... 0—4—0
6. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
7. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0

சாமிகளின் அடிமைகள் ... 0—12—0

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)

விலை ரூ. 1—0—0

"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

Goshaye office pillss.
கோஷாயி
ஆபீஸ் மாத்திரை



Dr.T.K.V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

மதத்தை ஒழிப்பது
உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.

Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
### By Dr. Paranjpye M. A., D. Sc.

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.
Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.

அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.

பச்சையப்பன் கலாசாலை

## லாட்டரி.

ரூ. 1,00,000- பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடியும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹாஸ்டல், சேத்துப்பேட்டை, மதராஸ்.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

Read.
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

# குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம்.

இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 ·8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0

## மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில்: அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.